தென்றல்

விலை 16 புதிய காசுகள்

~ ஆசிரியர்: கண்ணதாசன் ~

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, பங்குனி 29 (11-4-'59). சனிக்கிழமை | இதழ் 43

புயலைக் கிளப்பிய புதினம்!

1958-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் நாள் ரஷ்யாவின் மாபெரும் கவிஞன்—நாவலாசிரியன் **போரிஸ் பாஸ்டர்நாக்** இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றதாக அறிவிக்கப்பட்டது. செய்தியறிந்த பாஸ்டர்நாக் தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டார். உலகெங்கனும் இருந்து வாழ்த்துச் செய்திகள் குவிந்தன. ஆனாலும் சில நாட்களில் கிடைத்தற்கரிய அந்தப் பரிசை வெறுத்து ஒதுக்கும் அளவிற்கு ஆட்சியாளரால் கட்டாயப்படுத்தப்பட்டார். சிந்தனைக்குத் தடைபோட்டது ரஷ்ய அரசாங்கம். காட்டிக்கொடுத்துவிட்டான் பாஸ்டர்நாக் என்று கம்யூனிஸ்ட்கள் கூக்குரலிட்டனர். கோட்டைக்குள்ளே நடந்த குத்துவெட்டுக்களைக் குவலயமறியச் செய்துவிட்டானே என்று கொதித்தெழுந்தனர். அறிவுக்குத் தடைபோடும் ஆட்சியாளர்கள் சிறைப்பட்டுக் கிடந்த சிந்தனையின் விலங்குகளை அறுத்து எறிந்துவிட்டானே என அங்கலாய்த்தனர். சுதந்திரம் என்ற வார்த்தைக்குச் சுடுகாடு அமைத்த கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கல்லறை கட்டிவிட்டானே என்று கதறினர். அரசாங்கம் அமைத்ததே சட்டம்-அதை பின்பற்றுவதே எமது திட்டம் என ஆமையாய் ஊமையாய்க் கிடந்த மக்களின் மத்தியில் சிறிது சலசலப்பை ஏற்படுத்திவிட்டானே சண்டாளன் எனச் சஞ்சலப்பட்டனர். கம்யூனிஸ்ட் ஆட்சியாளரின் ஆதிக்க வெறி கண்டு-தனி மனிதனின் பிறப்புரிமைக்குத் தடைபோடும் அந்த யதேச்சதிகாரப் போக்கு கண்டு உலகமே கதறியது. கொடுமைக்கார நாஸி அரசாங்கம் சமாதானத்திற்காகக் கார்ல் வான் ஓஸியட்ஸ்கி என்பவருக்குக் கொடுக்கப்பெற்ற நோபல்பரிசை அவர் ஏற்றுக்கொள்ளா வண்ணம் செய்வதற்காக அவரைக் கொடுமைபடுத்தியது. அவர் அந்த நோபல்பரிசை ஏற்றுக்கொள்ள மறுக்கும்படி வற்புறுத்தியது. அதை விட மகாக் கொடுமை இது! இப்படி நல்லோர்கள் குரலெழுப்பினர். ஆனாலும் அன்றையதினம் ரஷ்யாவின் மாபெரும் கவிஞன் எனப் போற்றப்பட்டார். நாடு கடத்தப்படவேண்டும் பாஸ்டர்நாக் என்று குருஷ்சேவ் முன்னிலையில் சிந்தனையை அடகு வைத்தவர்கள் சீறிக் கிளம்பினர். ஏசலும் ஏளனமும் தூற்றலும் அவரை நோக்கி வீசி எறியப்பட்டன. செய்யாத ஒரு குற்றத்திற்காக அவர் சொல்லமுடியா மனவேதனை அடைய நேரிட்டது. அப்படி என்னதான் குற்றம்செய்துவிட்டார் பாஸ்டர்நாக்? காசுக்குப் பிறந்த நாட்டை காட்டிக் கொடுத்து செல்வச்சீமான் வாழ்க்கைக்கு வழிகோலினரா? அல்லது ஆண்டுகொண்டிருந்த கம்யூனிஸ ஆட்சியாளருக்குச் சாவுமணி அடிக்க அனைவரும் வாரீர்; ஆதரவு தாரீர்; ஒன்றெனச்சேர்வீர் என அறைகூவல் விடுத்தாரா? ஒன்றுமில்லை தோழர்களே. **1903-ம் ஆண்டிலிருந்த 1945-ம்** ஆண்டுவரை நடந்த சரித்திர சம்பவங்களின் பின்னனியில் தனது கதாபாத்திரங்களைச் சிருஷ்டி செய்திருந்தார் **டாக்டர் ஷிவாகா** என்ற நாவலில் அறுபத்தொன்பது வயது நிரம்பிய பாஸ்டர்நாக் அருமையாக சித்தரித்து இருந்தார் அன்றைய சம்பவங்களை. ஜார் ஆட்சியின் யதேச்சதிகார போக்கையும் 1917-ம் ஆண்டு நடந்த ரஷ்யப் புரட்சியையும் கண்கூடாகக் கண்டவராதலால் அற்புதமான முறையில் சித்தரித்திருந்தார் பாஸ்டர்நாக். நடைமுறையில் அவர் கண்டதையும் கேட்டதையும் சுவைபட எடுத்துச் சொன்னர். உண்மையில் பாஸ்டர்நாக் ரஷ்யக் கம்யூனிஸத்தை எதிர்க்கக் கிளம்பிய ஒரு புரட்சிக்காரரோ, அதை அமோகமாக ஆதரித்துக் கம்யூனிஸம்தான் இன்றைய உலகத்தின் துயர் நீக்க வந்த மருந்து என்று 'ஆமாம்' சாமி போடுபவரோ, அல்ல. 'மனிதனின் ஒழுக்க நிலையை வைத்த அவனது மதிப்பை எடை போடவேண்டும்' என்றுதான் சொன்னர். தனி மனிதனின் சிந்தனைக்கு ரஷ்யாவில் தடை போடப்பட்டதால் சில காலம் ஷேக்ஸ்பியர், கோதே, ஷெல்லி போன்றவர்களின் அமர படைப்புக்களை ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டார். **1953-ம்** ஆண்டு ஸ்டாலின் இறப்பிற்குப் பிறகு, தனி மனிதனின் சிந்தனைக்குப் போடப்பட்ட இரும்புச்சங்கிலியின் பிடி இலேசாகத் தளர்ந்தது. அறிவு என்ற கல்லிலே சிந்தனை என்ற கத்தியை தீட்ட ஆரம்பித்தார் பாஸ்டர்நாக். டாக்டர் ஷிவாகோ உருவாயிற்று. இரண்டு புரட்சிகளையும், ஒரு உள்நாட்டு போரையும். இரண்டு உலக மகா யுத்தங்களையும் உள்ளடக்கிய **40** ஆண்டு ரஷ்ய மக்களின் வாழ்க்கையை 12 கதா பாத்திரங்கள் மூலம் அருமையாக விளக்கினர். "உங்கள் தலைவர்கள் எதை எதையோ அதிகமாகப் பேசுகிருர்கள். ஆனல் ஒன்றைமட்டும் மறந்துவிட்டார்கள். அதுதான் நீங்கள் பலாத்காரத்தின் மூலம் அன்பைப் பெற முடியாது என்பதை" என்று டாக்டர் ஷிவாகோமூலமாக, பாஸ்டர்நாக் கம்யூனிஸ அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையின் தவறுதலை சுட்டிக் காட்டுகிருர். அன்பு. நேர்மை, சுதந்திரம் இதை நோக்கி அலையும் மனிதனின் உன்னதமான பேராவையை தெற்றென எடுத்துக் காட்டுகிருர் பாஸ்டர்நாக். மக்களுக்காக அரசாங்கம்; அதுதான் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் ஒரே வழி. அரசாங்கத்திற்காக மக்கள் என்பது தவருன வழி என்பதை முதன் முதலாக ரஷ்யாவில் எடுத்துச்சொன்னது டாக்டர் பாஸ்டர்நாக்தான் "பலாத்காரத்தின்மூலம் நாம் எதையும் பெறமுடியாது. நன்மையின்மூலம்தான் நன்மையைப் பெறமுடியும்" என டாக்டர் ஷிவாகோ மூலம் பாஸ்டர்நாக் ரஷ்யக் கம்யூனிஸ அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்கிருர். மார்க்ஸிய போதனைகளை பின்பற்றிய பிறகு மக்களுக்கு கிடைத்த பரிசுகள் துன்பம், துயரம், கண்ணீர் முதலிய இவைகள்தான் எனக் கூறுகிருர்.

இத்தகைய உண்மைக் கருத்துக்களை உலகுக்கு அளித்த அந்த டாக்டர் ஷிவாகோ என்ற புத்தகம் வெளிவந்த வரலாறு ஒரு சோகக் கதையை உள்ளடக்கியிருக்கிறது. பாஸ்டர்நாக் டாக்டர் ஷிவாகோ என்ற அந்த நாவலை முதன் முதலில் **நோவி மிர்** என்ற இலக்கியப் பத்திரிகைக்கு அனுப்பினர். ஆனல் அந்த பத்திரிகையின் கம்யூனிஸ்ட் ஆசிரியர் அதைப் பிரசுரிக்க மறுத்துவிட்டார். ஆனல் பாஸ்டர்நாக் **ஜியான்ஜியா கோமோ பெல்ட்ரினெல்லி** என்ற மிலான் நகரத்தை சேர்ந்த ஒரு கம்யூனிச பத்திரிகையின் பதிப்பாசிரியருக்கு வெளிநாடுகளில் பிரசுரிக்கும் உரிமையை விற்றுவிட்டார். டாக்டர் ஷிவாகோ கையெழுத்துப் பிரதி பெல்ட்ரினெல்லி கைக்கு வந்து சேர்ந்துவிட்டது. ரஷ்ய அரசாங்கம் அந்த எழுத்துப்பிரதியை மீண்டும் கைப்பற்ற முயன்று தோல்வியே கண்டது. இத்தாலியில் உள்ள அந்த மிலான் நகரத்தை சேர்ந்த

— 5-ம் பக்கம் —

உலகைக் கவர்ந்த நாவல்!

மாடல மறையவன்

செந்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினைச் சுவை பெறும் பொருட்டுப் படித்தவர்கள் பலருண்டு. ஆனால் சிலம்பில் ஒளிவிடும் சிந்திக்கத்தக்க உண்மைகள் பல உண்டு என்பதைப்பற்றி எண்ணுவோர் சிலர் எனில் தவறில்லை. அத்தகைய பயன் தரும் படிப்பினைகள் பலவற்றுள் ஒன்றினை மட்டும் இங்குக் காண்போம்.

கோவலன்-கண்ணகி வாழ்வியலை விளக்க எழுந்த சிலப்பதிகாரத்துள் தமிழக வாழ்வியலும்-பிற வாழ்வியலும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். தமிழர் பண்பாட்டிற்கும் பிறநாட்டவர் பண்பாட்டிற்கும் பெரும் நிருப்பம் உண்டு என்பதைக் காணலாம். தமிழர்கள் பிறர் நோவதைக் கண்டு தாமும் அதனை உணர்ந்து மனம் நெகிழ்வதைக் காணலாம். எச்சொல் கூறினும் நற்சொல்லாய், நனி பயன் தருவதாய்ச் சொன்னதைக் காணலாம். பயனில கூறி மனம் நோவச் செய்தல் பிறரின் பண்பாடு என்பதைக் காணலாம். கோவலன் வாழ்வில் ஊடாடும் பல பாத்திரங்களில் ஒன்றுதான் மாடல மறையவன்.

மாடல மறையவன் சிலம்பில் ஆற்றியுள்ள பணிகளை ஒன்றன் பின் ஒன்ருய்க் காண்போம். மாடல மறையவன் மதுரைக் காண்டத்தில் அடைக்கலக் காதையுள் முதன் முதலில் பேசப்படுகிருன். தெற்கே இருந்து புண்ணியம் தேடுதற் பொருட்டுக் குமரியம் பெருந்துறை மூழ்கித் திரும்புகிருன். நான்மறைகளையும் நன்கு கற்றுத் தேர்ந்த கொள்கையுடையவன் என்கிருர் இளங்கோவடிகள்.

"மாமறை முதல்வன் மாடலன் என்போன்
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன்......"

இத்தகு சிறப்புடையோன் சிலம்புத் தலைவனிடம் கொண்ட பற்று என்ன என்பதைப் பின்னர் கூறுகிருர் ஆசிரியர். கோவலன் மாதவிபால் பற்றுக்கொண்டு மணிமேகலையைப் பெற்றெடுத்துப் பெயரிட்ட விழாவில் பலரும் பரிசில் பெற்றனர். அதுபொழுது பரிசில் பெற்றவன் இம்மாடல மறையவன் என்பதை அவன் வாய்ச் சொற்களால் அறிகிறோம்.

நலம்புரி கொள்கையைக் கொண்ட இம்மறையாளன் கோவலனும்-கண்ணகியும் படும் துயரைக் கண்டு இளகி, மனம் வருந்தி "இம்மைச் செய்தன யானறி நல்வினை, உம்மைப் பயன் கொல்" என உரைக்கின்ருன்.

மாடல மறையவன் இவ்வாறு கூறியவுடன் கோவலன் தீக்கனு ஒன்று கண்டதாகவும் அதனல் வரும் தீங்கு கண்டு அஞ்சுவதாகவும் கூறுகிருன்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் வழித் துணையாக அமைந்தவர் துறவி கவுந்தியடிகள். மாடல மறையவன் கோவலனின் சென்ற கால வாழ்வை மாதவி நல்லாளுடன் வாழ்ந்த வாழ்வைக் கவுந்தியடிகளிடம் விளக்கமாகக் கூறுகிருன். கவுந்தியடிகளும் கேட்டு மனம் கொண்டார். கோவலன் "தீய கனவு கண்டேன்; துயரம் தொடருமா?" என்று ஏங்கி நிற்கையில், துறவுள்ளம் கொண்ட இருவரும்-மாடலனும், கவுந்தியும்—

"காதலி தன்னெடு செல்வதன் முன்
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியும் மாமறை முதல்வனும்
கோவலன் தனக்குக் கூறுங் காலை"—

மாதரி என்னும் இடைக்குல மடந்தை வந்து சேருகிருள்.

கவுந்தியடிகள் கண்ணகிபால் கொண்ட அன்புள்ளம் காரணமாக இருவரையும் மாதரியிடம் அடைக்கலப்படுத்துகிருர். மாதரி வருவதற்குமுன் இருவரையும் அவ்விடத்தை விட்டு உடனே புறப்பட்டு மதுரைக்கே போங்கள் என்றவர் மாதரியைக் கண்டவுடன் அவள்பால் அடைக்கலப்படுத்த முயல்கிருர்.

தன் கொழுநனை இழந்து கொடுந்துயர் அடைந்து நிற்கும் கண்ணகியின் நிலை வருத்தத்திற்குரியதே. கோவலன் மாதவியை விட்டு மனையகம் புகுந்தவுடன் 'மதுரை மூதூர்க்கு வா' என அழைத்தவுடன், "எழுகென எழுந்து" வந்தாள் கற்பின் செல்வி கண்ணகி. பெற்றவரிடம் சொல்லாமல், மாமன் மாமியிடம் கூருமல், மற்றவர் அறியாமல் இரவோடு இரவாகக் கோவலன் வழி காட்ட, காட்டு வழியில் நெடுந் தூரம் காலால் நடந்து மதுரை நடுவில் மணுளனை இழந்து, மன்னவன் அவையில் மறங்கொண்டு அறம் உரைத்து-அவலத்தின் மடியில் ஊர்ந்து நிற்பதைக் காண்கிறோம். பொருள் பெற வேண்டுமே என்ற வேட்கையால்- இழந்த திருவைத் திரும்பப் பெற வேண்டுமே என்ற உறுதியால்-மாற்ருர் அறியாமல் மதுரைக்கு வந்த இடத்தில், சுற்றம் இன்றி நெடுந் தொலைவு வந்த இடத்தில், தன் ஒரே துணையை இழந்தாள் கண்ணகி. இச்செய்தியைப் பெற்றோர் அறிய வாய்ப்பில்லை; இதனை எடுத்துச் செல்லும் தூதுவனுகப் பயன்படுகிருன் மாடல மறையவன்.

மதுரைக்கு உடன் துணை வந்த கவுந்தியடிகளிடம் முதன் முதலில் "கோவலன் மன்னவனல் கவருகக் கொலை செய்யப்பட்டான்" என்று மாடல மறைவன் கூறுகிருன். அதனைச் செவிமடுத்த கவுந்தியோ மன்னவன்மேல் மாருச் சினம் கொண்டு சபிக்க முயல்கிருர். அதற்குள் மாடலன், மன்னன் தன் தவறுணர்ந்து தானே உயிர் விட்ட செய்தியைக் கூற, கவுந்தியடிகள் உண்ணு நோன்பிருந்து உயிர் விடுகிருர்.

"தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்
என்னெடு இவர்வினை உருத்ததோவென
உண்ணுநோன்பொடு உயிர்ப்பதி பெயர்த்ததும்."

அடுத்து, கோவலனின் பெற்றோர் உறையும் புகார் நகர் சென்று அவர்களிடம் கோவலன் மாண்ட செய்தியைக் கூறுகிருன். அதனைக் கேட்ட அவன் பெற்றோர் கடுந்துயர் அடைந்தனர். கோவலன் தாய், பிள்ளைப் பாசம் பொருமல் உயிர் நீத்தாள்; தந்தை பொருளை எல்லாம் தானம் செய்து துறவியாகிருர்.

"என்பதிப் பெயர்ந்தேன் என் துயர் போற்றிச்
செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் குரைக்க
மைந்தற் குற்றதும் மடந்தைக் குற்றதும்
கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி
துறந்தோர் தம்முன் துறவி எய்தவும்
துறந்தோன் மனைவி மகன்துயர் பொருஅள்
இறந்ததுயர் எய்தி இரங்கிமெய் விடவும்"

என் மாடல மறையவனே கூறுகிருன்.

மூன்ருவதாக, கண்ணகியின் பெற்றோரைக் கண்டு மதுரையம்பதியில் நடந்தனவற்றை விரிவாக எடுத்துக் கூற, கண்ணகியின் தாய், மகள் துயர் பொருது அக்கணமே உயிர்விடுகிருள். கண்ணகியின் தந்தை துறவியாகிருர்.

"கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்
தானம் புரிந்தோன் தன்மனைக் கிழத்தி
நாள்விடுஉ நல்லுயிர் நீத்துமெய் விடவும்"

மாடல மறையவனே கூறுகின்ருன்.

இவ்வாறு ஒரு செய்தியைஎடுத்து கூறிய ஒன்றிற்காக இறந்து பட்டோர் மூவர். "அந்தப் பாபத்தைப் போக்குதற்குப் புண்ணிய நதியாகிய கங்கையில் நீராட வந்தேன்" என்று மாடல மறையவனே கூறுகிருன்.

"என்வாய்க் கேட்டோர் இறந் தோருண்மையின்
நன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்"

என்பதும் அவன் கூற்றே.

மேலும் மாடல மறையவன் சேர மன்னனிடம் பாண்டிய நாட்டு அரசியல் நிலையைத் தனியாகக் கூறியதற்கு அவன் நிரைச்கு நிரை பொன் பெற்றதையும்,

"பெருமகன் மறையோற் பேணி யாங்கவற்கு
ஆடகப் பெருநிறை ஐயைந் திரட்டித்
தோடார் போந்தை வேலோள் தன்னிறை
மாடல மறையோன் கொள்கென் றளித்தாங்கு"

என்று இளங்கோ அடிகள் இயம்புகிருர்.

வஞ்சிக் காண்டத்தின் இறுதியில் சேர மன்னன் சினம் தணித்தற்கு ஏற்ற ஒரு கருத்தை எடுத்துக் கூறி "அரும் பொருட் பரிசிலன் அல்லேன் யானும்" என்று விளக்கம் தருகின்ருன் மாடல மறையவன்.

இளங்கோவடிகள் சிலம்பில் மாடல மறையவனைக் காட்டுவதன் மூலம் என்ன கருத்தைப் பரப்ப எண்ணியிருக்கலாம். மாடல மறையவன் செய்திகளை எடுத்துச் செல்லும் ஒரு தூதுவனுகவே தோற்றுகின்ருன். இவனல் ஏற்பட்ட நன்மை, தீமை என்ன? என்பதையும் சிறிது நோக்கலாம்.

கோவலனும்-கண்ணகியும் மதுரைக்கு வரும் வழியில் கவுந்தியைச் சந்தித்து, துணையாக அடிகளையும் அழைத்து வந்தனர். துணையென வந்தவரிடம் தன் துயரத்தைப் பொதுவாக எடுத்துரைத்து, செல்லா வழியிலெல்லாம் சென்று சிறுமைப்பட்டேன் என்று கோவலன் கூறி மன அமைதி பெறுகிருன். கவுந்தியடிகளும் அவன் துயர் கண்டு வருந்தி ஆறுதல் மொழி பகர்கின்ருர். இந்த நிலையில் மாடல மறையவன் புறஞ்சேரியில் வந்து சேருகின்ருன். வந்ததும், வராததுமாய்க் கோவலனின் சென்ற காலச் செல்வச் சிறப்பைக் கூற எண்ணி, மாதவி-கோவலன் தொடர்பையும் மணிமேகலையின் பிறப்பையும் விளக்கமாய் விளம்புகின்ருன்.

இது வரையிலும் கோவலன் மேல் இரக்கம் கொண்டு புறஞ்சேரியில் தங்குதற்கு இடம் தந்த கவுந்தியடிகளே கோவலன்மேல் வெறுப்படையத் தொடங்குகிருர். "கற்பின் செல்வி கண்ணகியை விட்டு மாதவியை நாடியவனு?" என்ற மாசு அவர் அருள் உள்ளத்தையும் மூடிவிட்டது. அதுமட்டும் அல்ல; கோவலன் வறுமைக்கு அருள் உள்ளம் கொண்டு அறம் கூறியவர், கோவலன் கடும் தீக்கனு ஒன்று கண்டேன் என்று கூறியதற்கு விடை: "நீயும், உன் மனைவியும் இப்பொழுதே அந்த மதுரைக்கே போய்விட வேண்டும். இங்கு முனிவரே தங்கலாம், நீங்கள் போங்கள்" என்று விரட்டுகிருர்.

இவ்வாறு கவுந்தியின் உள்ளத்தையும் மாடல மறையவன் கூறிய (மாதவி-கோவலன் தொடர்பு) கூற்று மாற்றிவிட்டது என்ருல் தவறில்லை. எங்கேதான் கொலைப்படப் போகிறேமோ அங்கேயே போமாறு கவுந்தியடிகளே கை காட்டி விரட்டுகின்ருர்! எல்லாம் மாடலனின் சொற்கள்தாம்!

கோவலன் மதுரை மன்னனல் கொல்லப்பட்ட செய்தியைப் பிறரிடம் எடுத்துச் செல்லும் தூதுவனுக மாடலன் காணப்படுகிருன். இதிலும் எவ்வளவு தீமைகள்?

முதலில் கவுந்தியடிகளிடம் சென்று கோவலன் இறந்த செய்தி கூற, கவுந்தியடிகள் மனம் பொருது உயிர் விட்டுவிட்டார். இதனைக் கண்ட பிறகாவது இச்செய்தி கூறினல் பிறரும்கூடப் பொருர் போலும் என விட்டொழித்து வேறு வழி சென்றிருக்க வேண்டும்.

கவுந்தி உயிர் துறந்ததும், புகார் சென்று இரண்டாவதாகக் கோவலன் வீட்டிற் கூற அங்குக் கோவலன் தாய் உயிர்விடுகிருள். தந்தை துறவியாகிருர். இதைப் பார்த்தாவது இத்தொழிலை மாடலன் விட்டிருக்கலாம். அவன் குணம் விடுமா?

— 10-ம் பக்கம் —

சிறுகதை

பஞ்சமி

செத்துப்போன உயிர் ஒன்றின் சாகாத வார்த்தைகளிலிருந்து பஞ்சமியின் கதை ஆரம்பமாகிறது. மலைச் சூழலில் நிறையாக் கானகம், இளைஞனின் முதிராச்சிகைபோலக் கோல மற்றுச் சிதறியிருந்தது. வானப் பாழ் வெளியில் காக்கைக் கூடுகள்போல நீட்டிக்கொண்டும் கிளைத்துக் கொண்டும் புகைக் கறுப்பான முகில்கள் யாசகம் செய்து திரிகின்றன!

உடலில் சிவப்பு நீர்த்துளிகளாகச் சிதறியிருந்த முத்து நோயின் நமைச்சல் அவனுள் சிலிர்த்தது! அவன் விழித்துக்கொண்டான். செத்துப் போன தாமரையின் சாகாத வார்த்தைகள், பஞ்சமியின் தொடர்போடு வந்து மின்னின.

வாழ்வு, பொத்தல் கூரையின் பொய்த்தன்மை போல அவனுள் சிரித்தது. "இவ்வளவுதான். இதோடு இன்றோ நாளையோ உடல் வெறுமையாகிவிட்டால், 'பஞ்சமி எங்கே; தாமரையின் சாகாத வார்த்தைகள் எங்கே; அந்த வார்த்தைகளின் இழையில் தொங்கி நிலைக்கப்போகும் அவள் தங்கை தனத்தின் வாழ்வு எங்கே?"

பாலாடையில் நிறைந்த பாலுக்கும் குழந்தையின் சிமிழ்வாய்க்கும் உள்ள பந்தமற்ற தொடர்புபோல, தனமும் அவன் மனமும். தாமரையின் வார்த்தைகளால் புகட்டப்பட்டு ஒன்று சேரும் காலம்...

"அத்தான்."

ஊளைக்காற்றில் பஞ்சமியின் குரல் கேட்டது. உடலில் நிறைந்த நோய் முத்துக்களின் நீர்பளபளப்பிலும் அவள் குரல் புல்லரிப்பை உதிர்த்தது போல் அவனுக்குத் தோன்றியது.

டான்... டான்... டான்...காதினுள் பூனை மயிரைக் குடைந்து குழைக்கும் வேதனையாக இருந்தது. அந்த மணியோசையில், தாமரையின் வார்த்தைகளா ஒலிக்கின்றன?

"நான் போகிறேன். இன்றுதான் உறங்குவேன். நாளை விழிக்காதவளாவேன். நீங்கள் என்னை விரும்பினவர்கள் என்று நம்புகிறேன். இந்த ஓயாத நோயின் அவலத்திலும் விழித்திருந்து என்னை கவனிக்கும் உங்கள் செயலால் நான் எனக்குள் அமைதி பெறுகிறேன். அந்த அமைதியோடு வாழ்வு நிறைகிறது. அவ்வளவுதான். நான் அவ்வளவுதான்! ஆனால் எஞ்சியுள்ள உங்கள் நிலை? வார்த்தைகளை மூச்சால் எண்ணும் இந்த நிலையில் நான் ஒன்று சொல்கிறேன்... என் தங்கை ஆதரவற்றவள். எனக்காக அவளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். செய்வீர்களா...செய்வீர்களா...?"

"செய்வேன்" என்று அன்று கண்ணீரால் இதயத்தில் வரைந்த வார்த்தை-இன்று மணி ஒலியில், மலைச் சுவரில் எதிரொலித்து முள்ளாக அழுத்துகிறது.

"அத்தான்" என்று பஞ்சமி கதையாக நிற்கிறாள்.

"உன்னைப் பிரியமாட்டேன் பஞ்சமி!"

நாடக மேடையில் காட்சி துவங்குவதற்கு முன்னர், தொங்கும் வர்ணத் திரையின் ஓவியத்தை பார்த்தவாறு, உள்ளே என்ன நடக்கிறதோ என்று கற்பனை பண்ணிக்கொள்ளும் சாதாரண ரசிகனைப்போல, அவன் தனத்தைப்பற்றி எதையும் அறியாமல் இருந்தான். தாமரைக்கு வாக்குக் கொடுத்த முன்போ பின்போ அவளைக் கண்டதேயில்லை. எங்கோ தொலை கிராமத்தில் உள்ள கற்பனை-அவள்! பஞ்சமி வருவதற்கு முன்னல்-தன் எதிர்காலத்தை அந்தப் புரியாத பெண்ணோடுதான் பிணைத்து வைத்திருந்தான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்து பஞ்சமியின் கதை ஆரம்பமாகிறது.

வெளிறிய வான வெளியிலே பாதை தெரியாத கபோதியைப் போலப் பருந்தொன்று சூன்யப் பெருவழியில் துழாவிக்கொண்டு பறக்கிறது. கானல் வெளி நீர்ப் பிரமையாக அவனது பார்வை எங்கெல்லாமோ போய்த் தொட்டுத் திரும்பின. நோய் தீர்ந்து மலைக் கோயில் வாசத்தை முடித்துக்கொண்டு வீடு வந்திருந்த அவனைக் காற்றில் சுடரை பொத்துவதுபோலப் பாதுகாத்தாள், பஞ்சமி.

பஞ்சமி மேல் மனம் எப்படி ஒட்டிக்கொண்டது? தாமரையிடம் ஒட்டியிருந்த அதே ஒட்டுதல்தானா இந்தப் பிணைப்பும்? காதல் என்பது தான் என்ன? பாறைமுகட்டில் எட்டாத புதரில் கூடமைக்கும் கழுகின் புத்தி சாதுரியம் போன்ற ஒரு சக்தியா அது?

கழுகு கொடுமையும் அருவருப்பும் கொண்ட ஒரு பிராணி. 'மலரைப் போல' ஒன்று உவமை வைக்கும் காதலுக்குக் கழுகு எப்படி நிலைப் புள்ளியாயிற்று?

காதல் கழுகுக் கூட்டின் சாதுரியமேயானாலும் மலை யாறுபோல, வெள்ளப் பெருக்கின் போதெல்லாம் உருமாறுவது!

மனதிற்கேற்ற ஒப்புவமை கண்டு பிடித்தாயிற்று. இனிப் பஞ்சமி...?

சின்னச் சிறுமியாக அவள் அவன் வீட்டில் வந்தாள். அன்று அவன் பருவத்தையும் வென்ற நீருக இருந்தான். அந்த நீற்றுக் குவியலிலிருந்து சரித்திரம் துவங்குகிறது. அவள் எப்படி அவனுள் உருவானாள்? அதுவரை ஆசைக்கு வரம்பாக நின்ற தாமரை-அவள் மறைவிற்குப் பின்னர், அவளது வேண்டுகோள்கள்?

வரம்பிற்கு உட்பட்டு எது நிற்கிறது? உலகில் ஒவ்வொன்றும் வக்கணையில் பிறந்ததுதான். நியாயமும் நீதியும்கூட வக்கணையின் வரம்புகள்தான்!

அவளது சிறுமை மலர்ந்துகன்னித் தன்மை மணத்தபோது, அவள் பால் கொண்ட ஆசை பொங்கு நீர்போல மலைகட்டி உதிர்ந்தது. அந்தச் சிதறலிலே எத்தனை வர்ணங்கள்...பச்சை சிவப்பு-நீலம், மஞ்சள்-அந்த வர்ணக் கலவையிலே தனம் மறைவுப் புள்ளியானாள். பஞ்சமியின் குளிர்ந்த கண்களும் ஒளிர்ந்த பார்வையும் பனித்த பேச்சும் நெஞ்சக் கனவுகளாயின! அவளுக்கே அவன் உரிமையானான்.

"இலையைப் பாருங்கள். சோறு போடுகிறேன். கூட்டு அப்படியே இருக்கிறது. மிச்சம் வைத்துவிட்டுப் போனால் நான் பொல்லாதவளாக இருப்பேன்." இந்த உரிமையில் கண்ணும் விரல்களும் பாவம் பேசும். உதடு சிரிப்பை வரையும். முகத்தில் உரிமையின் நிறைவு உள்ளத்தில் உவகையின் நனைவு

இந்த நனைவால் பஞ்சமியிடம் 'காதல்' ஏற்பட்டதா?

பஞ்சமிக்கப்பால் இனி வேறொன்றில்லை. தாமரைக்குக் கொடுத்த வாக்கு உதிர்ந்த பொழுதின் மூச்சுக் காற்றுபோல மறக்கப்பட வேண்டியவைகள், தனம் தொலை வெளியின் மறதி!

★

அவன் சிந்தைகள் உறுதியில் கலைந்தன. அன்று காலையில், பஞ்சமி, குளித்துவிட்டு, புனையாத கூந்தலோடு அவன்முன் வந்து சிரித்த போது அவன் மனதினுள் ஏதோ இனம் புரியாத ஒரு நடுக்கம் தலைதூக்கியது.

'இந்த அழகு. நனையாத கண்களின் அழகு; அமைதியான பண்பின் அழகு. ஆடாது நின்றெரியும் சுடரின் அழகு தாமரையைப்போல, நிறைவேருத ஆசைகளைப் பெற நேர்ந்தால் தனத்தைப்போல் ஏமாற்றமடைய நேர்ந்தால்...'

அவனுக்குத் தன்னையே நிதானிக்க முடியாத நிலையில் 'பஞ்சமி!' என உரக்க அலறிவிட்டான்.

'அத்தான்!' என்று எதையுமறியாத அவள் பதறினாள்.

இரவும் பகலும் வார்த்தைகளால் மெழுகி மெழுகி அவன் எப்படியோ பஞ்சமியிடம் தாமரையின் அந்தக் கதையையே சொல்லிவிட்டான். காக்கைக் குரல்போல அபஸ்வரமாக நெஞ்சிலிருந்து எல்லாம் ஒழுகி வழிந்துவிட்டது மந்திர முணுமுணுப்பை அறியாது விழித்திருக்கும் மூலக்கிரகச் சிலையைப்போல பஞ்சமி எல்லாம் கேட்டாள். அந்த மொட்டினுள் ஒரு சிலிர்ப்பு! நாட்கள், எறும்புப் பட்டாளம்போல, குலையாமல் ஒன்றன் பின் ஒன்றாக வந்து போயின. பஞ்சமி இப்பொழுதெல்லாம் தனக்குள் குடியிருந்தாள்! ஆயினும் அவனிடம் காட்டும் அந்தக் கலகலப்பு சற்றேனும் மாறவேயில்லை.

ஒரு நாள் பஞ்சமி, கிராமத்தில் தாமரையின் தங்கை தனத்தைத் தேடிக்கொண்டு போனாள். மனதில் முடிந்த ஒரு தீர்மானத்தின் வேகத்தில் அவள் அந்தக் கிராமத்தில் தனத்தைக் கண்டாள்! வீடும் சுற்றமும் அன்றி வேறு உற்றவர் அற்ற ஒரு தனிமையான பெண். அவள் கதையறியாதவள். பஞ்சமி அந்தப் பெண்ணிடம் அவளுக்கு உரிமை கொண்டவனைப்பற்றிச் சொன்னாள்!

நடக்கக்கூடாதது நடக்கப் போகிறது. பஞ்சமி இப்படித் தணலாக மாறுவாள் என்று அவன் எண்ணவேயில்லை. தாமரையின் வார்த்தைகள் உண்மையாகப் போகின்றன இன்னும் சிறிது நேரத்தில் தனம் அவன் மனைவியாகப் போகிறாள். அமைதியே உருவான பஞ்சமியே அத்தனைக்கும் காரணக்காரியாக இருந்தாள் என்றெண்ணியபோது அவன் மனம் சிலிர்த்தது எவ்வளவோ மறுத்தும் வெட்டி முறித்ததுபோல, தனத்தையே மணந்துகொள்ள வேண்டுமென்று கட்டளையே பிறப்பித்துவிட்டாள் பஞ்சமி. தான் உயிரோடிருக்க வேண்டுமென்றால் அந்தத் திருமணம் நடந்தேயாக வேண்டுமென்று பஞ்சமி கோடிட்டாள்.

மணப் பந்தல் சிங்காரமாகப் பொலிந்தது. குழுமியிருந்தவர்கள் நிழல்களாகப்பட்டனர், அவனுக்கு. விபரீதம் விளைவித்து வைத் தவினை. இவ்வளவு தூரம் தன்னைப் பழிவாங்கிவிட்டதை எண்ணியபோது பஞ்சமியைப்பற்றி அவன் அது நாள் வரை புரிந்துகொண்டது. அத்தனையும் பொய் என்று அவனுக்குப் பட்டது

யாரோ நீளமான இரண்டு பூமாலைகளை எடுத்துக்கொண்டு போய், தட்டில் ஆயத்தம் செய்கின்றனர். மணமேடையில் அகிலைப் புகையாக விசிறுகிறான் புரோகிதன். எல்லோரும் ஏதோ பிரமாதத்திற்காக வியர்வை கொட்ட அமர்ந்திருப்பதாக அவனுக்கு தோன்றியது. இரவுத் திருமணமாகையால் மங்கல் நிலவு தெளியாப் புன்னகையாக விரவுகிறது! உயர்ந்த குத்துவிளக்குகள் உண்மையின் ஒளி நாக்குகள்போல நிமிர்ந்து நின்று ஒளிவிடுகின்றன. புரோகிதனின் விகார முகத்திலே அந்த ஒளி நிழலாடுகிறது. அந்த விகாரம்தான், செத்துப் போன தாமரையின் சாகாத வார்த்தைகளா?

'பெண்ணை அழைத்து வாருங்கள்...பெண்ணை அழைத்து வாருங்கள்..."

யார் கத்துவது? புரோகிதனா-தாமரையா?

பெண் வருகிறாள்...அவன் அமர்ந்திருக்கிறான். குருதி மேடையில் பலியாட்டின் அவலம் நாதசுவர இசையாக அழுகிறது! இதயத்தில் யாரோ ஓங்கித் ஓங்கி தட்டுகிறார்கள்!

அவன் பெண்ணை நிமிர்ந்து பார்க்கிறான். தனம்! படபடத்த கண்களோடு பின்னும் பார்வை முகத்தை அழுத்தித் தடவுகிறது.

'யார்?"

இதய இருட்டில் இழுத்த மின்னல்களாக மின்னி வலித்தது.

'பஞ்சமியா பெண்-மணைப் பெண் பஞ்சமியா?"

மணப்பெண் மண மேடையில் புகுந்துவிட்டாள். குழுமிய பெண்கள் கலகலவென்று குலவை யெழுப்பினர்.

மேடையின் பின்புறமிருந்து அவன் காதோடு ஒரு குரல் பேசிற்று.

"அண்ணா உங்கள் பஞ்சமியை உங்களுக்கே தந்துவிட்டேன்"

விடியப் பொழுதில் புது மண மெத்தையில் துயிலாத கண்ணின் பஞ்சமி, அவனது அணைப்பிலே சுருண்டிருந்தபோது-அவள் சொன்னாள். "தனம் நல்லவள். அன்பை உணர்ந்தவள்!"

— ஆ. மாதவன்

திபேத்தில் சிக்கல்

ஆசியக் கண்டத்தில் ஒரு நடுப் புள்ளி-உலகின் உச்சாணிக் கொப்பு-பனிப் படலத்தின் இடையே உள்ள பழைமை மாளிகை-பௌத்தத்தின் ஒரு தொட்டில்-இந்தியப் பகுதியின் வாட்டிகன் என்றெல்லாம் வருணிக்கப்படுகின்ற திபேத், இன்று பல்லோரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

மத்திய ஆசியாவில் 30 இலட்சம் மக்களைக் கொண்டு வாழ்வது இந்நாடு. கடல் மட்டத்திற்குமேல் 16000 அடி உயரத்தில் உள்ள இதை உலகின் கூரை என்பர். ஆண்டு முழுதும் பனிமூட்டம் இருப்பினும் நெடு நாட்களாக நிலைத்து நிற்கிறது இது. வாடிகனின் சகல நிர்வாகத்திற்கும் மதகுருவான போப் எப்படி அரசராகிருரோ, அப்படித் தான் இந்நாட்டின் தலாய்லாமாவும். "அவரே இந்நாட்டின் மதத்தலைவர். அவரின் கீழ்த்தான் அந்நாட்டின் ஆட்சியும். அவரின்றி எதுவும் இல்லை. அவர் வகுப்பதே அதிகாரத்தின் எல்லை!" என்றுதான் நிலை இருந்தது. போப்புக்கெனத் தனி அரசும் நாடும் இருப்பதுபோல் தலைலாமாவுக்கும் தனிநாடும் ஆட்சியும் உண்டு.

திபேத்தின் எல்லையையும் பரப்பையும் கணக்கிட முடியாத அளவு குழப்பங்கள் பல உண்டாம். அதன் வடக்கில் சிங்கியாங்கும்; வட கடைசியிலும் கிழக்கிலும் சீன மாநிலங்களான சிங்காயும், சிக்காங்கும்; மேற்கில் காஷ்மீரும் லடாக்கும்; தெற்கில் இந்தியத் துணைக்கண்டமும் பூட்டானும் நேப்பாளமும் உள்ளன.

பழைய லாசா மொழியின் கொச்சைச் சொல்லில் **போட்** என்றும், அது வளர்ந்துள்ள இக்காலத்தில் **போ** என்றும் அழைக்கப்பட்ட இந்நிலம், மேலை நாட்டினரால் **திபேத்** என்று பெயர் பெற்றது.

திபேத் ஒரு பனிப்பாலை, கடினமான உழைப்பின் பேரில்தான் எதுவும் கிடைக்கும். இங்குள்ள மக்கள் பனிப்படலம் படர்வதற்கு முன்பே இங்கு வந்திருக்க வேண்டும். இம் மக்களை நான்கு பிரிவில் அடக்கலாம். அவையாவன: (1) வணிகர் (2) உழவர் (3) இடையர் (4) பெருமக்கள். பெருமக்கள் என்பார், தலைலாமாவின் உறவினராகவோ, லாமாவின் அதிகாரம் தோன்றுவதற்கு முன்னிருந்த அரச பரம்பரையின் மிச்சம் மீதியாகவோ தாம் இருப்பர். தலைலாமா பதவிக்கு ஒருவர் வந்தால், அவரது உறவினர்களுக்குப் பல சலுகைகளினால் அளவற்ற நிலபுலங்களும், பொன்மணிகளும் கிடைக்கின்றன. செல்வம் கிடைத்ததும் அன்னார் பெருமக்களாகிவிடுகின்றனர்.

மற்றொரு பிரிவினர் இடையர் ஆவர். யாக் எனும் எருமை உள்ளிட்ட பல கால் நடைகளை வளர்த்துக்கொண்டு பள்ளத்தாக்குகளிலும் மலை உச்சிகளிலும் இருப்பர். இம்மக்கள் யாக் எருமையின் மயிரினால் ஆன கூடாரத்தில் வாழ்வர். அக்கூடாரங்களைச் சுற்றிச் சிறிய சுவர்கள் "காம்பவுண்டு" போல் கற்களாலோ மாட்டுச்சாணத்தாலோ அமைக்கப்பெறும். அப்போதைக்கப்போது கூடாரங்களைக் கிளப்பிக்கொண்டு இடம் மாறிமாறிச் செல்வர் மேய்ச்சலுக்காக; இப்படிக் கூடாரத்தில் வாழும் மக்கள் "டிராக்-பா" எனப்படுவர். மலைக் காடுகளில் திரியும் இம்மக்கள் ஆண்டுக்கு ஒருமுறை கீழே கூடும் சந்தைகளுக்கு வந்து தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கிச் செல்வர். பெரும்பாலும் தலை நகரான லாசாவில் கூடும் சந்தைக்கே வருவர்.

திபேத்தின் தெற்கிலும், தென் கிழக்கிலும் உள்ள பள்ளத்தாக்குகளில்தான் உழவரும் உழவும் அதிகம். ஆனால் மனித எண்ணிக்கை குறைவாகவே இருப்பதால் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. எருதையோ யாக் எருமையையோ கொண்டு உழவு நடத்தும் இம்மக்கள் பார்லி, வால் கோதுமை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். ஆனால் அத்தனை நிலங்களும் பெருமக்களின் உடைமையே. இவ்வுழவர்கள் பண்ணையாள் முறையிலேயே உழைக்க வேண்டியுள்ளது.

வணிகர்கள் பெரும்பான்மை லாசாவில்தான் இருக்கின்றனர். ஆனால் வணிகம் பெருமளவில் நடப்பதற்கு வழி தரும் வகையில் எந்த உற்பத்தியும் கிடையாது. கம்பளி நெசவும், நூற்பும் நடக்கின்றன. கம்பளி ஆடையும் பிற உணவுப் பொருள்களும் தாம் விற்பனையாகின்றன. சாலை வசதிகள் பிறநாட்டோடு தொடர்பு கொள்ளும் அளவிற்கு இல்லாததோடு, வேறு நாட்டுப் பொருள்கள் வந்தாலும் வாங்குவதற்கு வசதியில்லை; இந்நாட்டு மக்களின் படைப்புக்களும் பிறநாட்டில் கிடைக்காதன அல்ல.



அண்மையில் சீன அரசினர் பல பாதைகளைச் சீனுவுக்கும் திபேத்திற்கும் போட்டனர் எனினும் அவை வணிகத்திற்கோ அறிவு வளர்ச்சிக்கோ உதவவில்லை. மாருக, சீன ஆதிக்கத்தைப் பலப்படுத்தத்தான் உதவுகின்றன. படைகள் எளிதில் வருகின்றன வசதியான இப்புதுப் பாதைகளில்.

இந்நாட்டின் மக்களுள் கால் வாசிக்குமேல் பௌத்த மடங்களில் குருக்களாகவும் ஊழியர்களாகவும் உள்ளனர். இவர்களும் சிறு சிறு பொருள்களை விற்பது உண்டு.

உணவும் மிருகமும்

இம்மக்களின் உணவில் பெரும்பாலும் யாக் எருமையின் பாலாலான பொருள்கள் கலந்திருக்கும். யாக்கின் பால், இறைச்சி, வெண்ணை முதலியன சிறந்த உணவாகவும் விலை போகுபவையாகவும் உள்ளன. கியாங், ஆண்டிலோப் என்ற வகை மான்களும் உள்ளன இங்கு. அவற்ருேடு பேரல் எனும் காட்டு ஆடுகளும், கரடி, சிறுத்தை, ஓநாய், குள்ளநரி, அணில், குரங்கு, நாய், பூனை, வாத்து முதலியனவும் உண்டு.

பௌத்தம் பரவியது

கி. பி. ஏழாம் நூற்றுண்டில்தான் பௌத்தம் இங்கே பரவியது. குறிப்பாக கி. பி. 1013-ல் **தர்மபாலர்** என்ற பிக்கு தம் பல சீடர்களுடன் இங்குவந்து பௌத்தத்தை வளர்த்திருக்கிருர் இவர் காஞ்சியில் பிறந்து நாலந்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய தர்மபாலரே என்றெண்ணுகின்றனர். அடுத்து **ஆதிஷா** என்ற பிக்கு சென்றுள்ளார் அவரும் பிறரும் பல திபேத்திய நூற்களை மொழிபெயர்த்ததோடு, பௌத்த மத நூற்களையும் திபேத்திய மொழியில் மொழிபெயர்த்திருக்கின்றனர். திபேத்திய மொழிக்கும் பர்மிய, சீன, சயாமிய மொழிகளுக்கும் பெருமளவில் ஒற்றுமை உண்டு. தம் 59-ம் வயதில் திபேத்திருந்து திரும்புகையில் ஆதீஷா, விக்ரமசீலா என்ற மடத்தை நிறுவி வந்துள்ளார்.

தலைலாமா கதை.

மஹாயண பௌத்தத்தை ஏற்றுள்ள இம்மக்களிடை 500 ஆண்டுகட்கு முன்னர்தான் தலைலாமா பதவி ஏற்பட்டது. தலைலாமாவை "வாழும் புத்தர்" என்று கருதுகின்றனர். தலைலாமாவாக இருப்பவர் இறந்தாலும், அவர் உயிர் அழிவதில்லை.

அந்த உயிர்

தலைலாமாவின் அந்த உயிர், தலைலாமாவாக இருப்பவர் இறக்கும் அதே நேரத்தில் வேருேர் இடத்தில் குழந்தையாகப் பிறக்குமாம். சாவுச் சடங்குகளை முடித்தும் பௌத்த மடங்களைச் சேர்ந்தோர் தலைலாமா எங்கே பிறந்திருக்கிருர் என்று தேடக் கிளம்பிவிடுவர். தேடும் முயற்சிகள் ஆண்டுக்கணக்கில்கூட நடந்துள்ளனவாம். இப்போதுள்ளவர் 14-வது தலைலாமா ஆவர். அவருக்கு உலக நியதிப்படி வயது 24 தான். தலைலாமாவின் உயிர் அழிவதில்லை என்று மதச்சம்பிரதாயப்படி, முதல் தலைலாமாவிலிருந்து இன்று வரையுள்ள காலம் ஆன 500 ஆண்டையும் கணக்கிட்டு இன்றைய தலைலாமாவுக்கு வயது 500 என்கின்றனர்.

வாழும் புத்தர்

இப்போது வாட்டத்திற்கு ஆளாகியுள்ள "வாழும் புத்தர்" (தலைலாமா) 1935-ம் ஆண்டு ஜூன் 6-ம் நாள் சீனுவின் சிங்காய் மாகாணத்தில் ஏழை உழவன் ஒருவனின் மகனுய்ப் பிறந்தார். இவருடன் பிறந்தோர் ஐவர். இக்குடும்பம் மூன்று மாடியும் தங்கக்கூரையும் கொண்ட மடம் ஒன்றின் அருகில் வாழ்ந்தது. இமமடம திபேத்திய தலைலாமா மடத்தின் பிரதிநிதித்துவ மடமாகும். புதிய தலைலாமாவைத் தேடியலைந்த இம்மடத்தினர், எதிர்காலத்தைச் சொல்வது என நம்பப்படும் சோ - கோர் - கி என்ற ஏரியிடம் "குறி கேட்டுவிட்டு"த் திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது அந்த உழவனின் மகனுன சிறுவன் ஓடிவந்தான். ஏரியிலிருந்துதிரும்பிக்கொண்டிருந்த லாமா ஒருவர் இடம் இருந்த, இறந்த தலைலாமாவின் ஜபமாலையை எடுத்துத் தன் கழுத்தில் போட்டுக்கொண்டான். புத்தருக்கு இருந்தது போல் முன்னுக்குத் தளளிய காதுகள், இவனுக்கும் இருந்தனவாம். முந்திய தலைலாமாவுக்கு இருந்தது போல் புஜத்தில் மச்சம் இருந்ததாம். அடுத்து ஒருகுவியலில் கிடந்த இறந்த லாமாவின் ஜபமாலைகள், மூங்கில் கழிகள், ஏவலரை அழைக்கும் பறை ஆகிய அனைத்தையும் கண்டெடுத்தானும். இவற்றைத் தடுமாற்றமில்லாது எடுத்ததும் "இவனே தலைலாமாவின் மறு பிறவி" என ஒப்புக்கொண்டு எல்லோரும் குதித்தாடினராம். 4 வயதே ஆன இந்தப் பையனை 1939-ல் தங்கச் சிவிகையில் வைத்து லாசாவுக்குத் தூக்கிச் சென்றனர். அங்கே விரைவாக அவன் 14-வது தலைலாமாவாக முடிசூட்டப்பட்டான். அன்றிருந்து அச்சிறுவனது மழலையே திபேத்தைக் காக்கும் கடவுளின் ஆணையாயிற்று அச்சிறுவனே 30 இலட்சம் திபேத்தியரின் வாழும் புத்தன் ஆனுன்; கட்டளையிடும் காவலன் ஆனுன்; நிறைமதியும் பேரருளும் கொண்ட ஞானி ஆனுன்; புனிதமும் வலிமையும் செறிந்தவன் ஆனுன். "ஆனுன்" என்பதைவிட "ஆக்கப்பட்டான்" என்பதே பொருந்தும்.

மாளிகை வாழ்வு

லாசாவில், குன்றின்மேல் உள்ள தலைலாமாவின் மடம் 1400 அறைகளைக் கொண்டது. போட்டாலாவில் உள்ள இக்குளிர் காலமாளிகை கடவுளின் மாளிகை எனப்பெறும்.

இருநற்கள் தொலைவில் சிறியதனா வேனில் மாளிகையும் உள்ளது, இவற்றிலே, தன் காலத்தை மஹாயண பௌத்தப் பள்ளி முறை தியானத்திலும், தத்துவக் கல்வியிலும் கழிக்கிருர் தலைலாமா. இங்கு தலைலாமாவைப் பெற்றவள் தவிர வேறு எப்பெண்ணும் நுழையமுடியாது. அவ்வப்போது வந்த சில மேலை நாட்டினர் இவரது மாளிகைக்குள் வர அனுமதி பெற்றது பெரும் முயற்சியே. "மிகுந்த கடவுள் நம்பிக்கையும், கல்வியில் ஆர்வமும், புதியன தெரிவதில் ஆசையும் கொண்டவராகக் காணப்பட்டார்!" என மேலை நாட்டினர் குறிப்புக்கள் உள்ளன. இவர் காமிரா போன்றவற்றிலும் மின்சாரக் கருவிகளிலும் மெத்த ஆவல் கொண்டுள்ளார். ஒரு முறை ஒரு பார்வையாளரிடம் கூறினூராம்: "எனக்கு முன்னிருந்தவர்க்குக் குதிரைகள் என்றால்தான் மிகப்பிரியம். ஒரு வேடிக்கை; எனக்கு அவற்றைப் பற்றி ஒன்றும் தெரியாது."

புத்தரின் மகாபரிநிர்வாண விழாவிற்காக 1956—'57-ல் இவர் இந்தியாவிற்கும் அதற்குச் சற்று முன்சீனத்திற்கும் சென்றிருக்கிருர். இரண்டிடத்திற்கும் கூடவே பஞ்சன் லாமாவும் வந்திருக்கிருர். இப்போது

— 9-ம் பக்கம் —

மா. பாண்டியன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 | 11-4-59 | இதழ் 43

முக்கியக் கடமை

விடுதலைப் பறைகொட்டி, வீரநடை போட்டுவரும் எழுச்சிப்படையின் நாயகர்-சிந்தையள்ளும் செந்தமிழ் நாவலர், அழைக்கிறார்! தமிழ்க் குலத்தின் பெருமையினை உணர்ந்தோரை எல்லாம், அணிவகுப்பில் கலந்திட அழைக்கிறார்!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று சொல்லின் முழுப் பொருளுணர்ந்த நான்கு மொழியினரையும் அழைக்கிறார்! அழைக்கிறார், நாவலர்! அழைக்கிறது அறிவகம்!

பகுத்தறிவுப் படையாம் தி. மு. கழகம் தொடங்கப்பெற்று ஆண்டு பத்தாகப்போகிறது. இந்த இடைக்காலத்தில் இதன் சாதனைகள் அளவிடற்கரியன. நாட்டு நலம் நாடி மேற்கொண்ட போராட்டங்கள் பலப்பல. மும்முனைப் போராட்டத்தை நடத்தினோம். இந்தி அழித்தோம். ஆணவக்காரப் பண்டிதரின் நாவறுக்கக் கறுங்கொடி காட்டினோம். தஞ்சை மோட்டார்த் தொழிலாளரும் திருச்சி பீடித் தொழிலாளரும் நங்கவரம் உழவரும் நடத்திய உயிர்ப்பு இறப்புப் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்தோம். எல்லைச் சிக்கலை எதிர்த்தோம். இப்படி எண்ணற்ற பல்வேறு போர்களில் சேர்ந்து செங்குருதி சிந்திய நாம் தேர்தல் களத்திலும் இறங்கினோம். காங்கிரசாரின் நப்பாசையைச் சிதைக்கும் அளவுக்கு வெற்றி சூடினோம்.

திராவிடம் நம்மை கவனிக்கத் தொடங்கியது. திராவிடர் பல்லாயிரவர் நம் கொள்கை முழக்கத்தையும் விடுதலைப் பெருமையையும் செவிமடுத்தனர்; சிந்தையிற் கொண்டனர். கழகம் வளர்ந்தது; வளர்கிறது. பட்டி-தொட்டி எங்கும், பட்டணம்-கோட்டைகள் யாண்டும், நம் எண்ணங்கள் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டன. இது, உள்ளம் களிக்கும் சேதி; உழைப்பின் உயர்வு கூறும் காட்சி!

இவ்வாறு வரும் வளர்ச்சியை வகைப்படுத்தவும், ஒரு வழிப்படுத்தவும் கழகம் மேற்கொள்ளும் முறைகளுள் ஒன்றுதான் உறுப்பினர் சேர்த்தல் ஆகும். காலத்தின் வளர்ச்சியைக் கணக்கிடுவது வரலாறு ஆகும். வரலாற்றின் வளர்ச்சியைத் தேசிய இயக்கங்களும், தேசிய இயக்கங்களின் வளர்ச்சியை அவற்றின் உறுப்பினர்கள் வளர்ச்சியும் தாம் கணக்கிடுகின்றன. திராவிடரின் தேசிய இயக்கமும் விடுதலைப் பாசறையும் ஆன திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கணக்கிடுவதும், அதன் உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பொருத்துத்தான். '53-ல் நம் தலைமையர்மீது வழக்கு நடைபெற்றபோது நம் வளர்ச்சியை ஓரிலட்சம் உறுப்பினர் எண்ணிக்கையை வைத்துத்தான் கணக்கிட்டுக் காட்டினர், காவல் துறையினர்.

1953-ல் நம் உறுப்பினர்கள் ஓரிலட்சம். இன்று மிகவும் வளர்ந்துள்ள நம்மின் எண்ணிக்கை மூன்று நான்கு மடங்குகள்கூடச் செய்யும். புதுக்கோட்டைப் பொதுக்குழு முடிவுப்படிப் பொதுச்செயலாளர் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்கும், பழைய உறுப்பினர்களைப் புதுப்பிப்பதற்கும் அறிக்கை விடுத்துள்ளார். கழகத்தின் வரலாற்றில் நான்காவது முறையாக உறுப்பினர்கள் சேர்க்கப்படுகின்றனர். கழகத்தின்பால் திராவிடர் காட்டும் ஆர்வம் அதிகம்; அறிவோம். ஆர்வம் ஆற்றலுடன் செயல்பட வேண்டுமானால் அனைவரும் உறுப்பினராகவேண்டும். தலைமைக் கழகத்தின் உறுப்பினர் ஆனால் தான் நாம் செய்யும் தொண்டிற்கு முத்திரை பெற்றவர் ஆவோம்! பட்டயம் அடைந்தோர் ஆவோம்! 1-4-'59 முதல் 30-6-'59 வரையும் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவர்.

உறுப்பினர்கள் பெருகினால் கிளைகள் பெருகும்; கிளைகள் பெருகினால் கழகம் வளரும். கழகம் வளர்ந்தால் கொள்கை வெல்லும்! காலகாலத்திற்கு நம் பெருமையை-தொண்டை, வரலாறு சொல்லும்!

உறுப்பினராதலே நம்மின் முக்கியக் கடமை! முதல் வேலை! அதுவே நம் ஆர்வத்தைக் காட்டத் தக்க வழி! அதுவே தாயகம் மீட்கத் துடிப்போர்க்கெல்லாம் உள்ள பணி! எனவே, திராவிடப் பெருங்குடிமக்களே! தென்னாட்டின் ஒளிமணிகளே! ஆகுவீர் உறுப்பினராய்! அணிவகுத்து ஏகுவீர் செருமுகத்திற்கு! ★

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கம்யூனிஸ அதிகாரிகள் அந்த நாவலைப் பிரசுரிக்க வேண்டாமென்று பெல்ட்ரினெல்லியிடம் சொல்லிப் பார்த்தனர். ஆனால் பதிப்பாசிரியர் அதை எப்படியும் வெளியிட்டு விடவேண்டும் என்ற ஒரே முடிவிற்கு வந்துவிட்டார். "என்னைப் பொருத்த வரையில் டாக்டர் ஷிவாகோ என்ற அந்த பாஸ்டர்நாக் நாவல் ஒரு மாபெரும் அதிசயப் படைப்பு. எனவே அதைப்பிரசுரித்தே தீருவேன்" என்று அந்தகம்யூனிசப் பத்திரிகைப் பதிப்பாளர் கம்யூனிச அதிகாரிகளுக்கு எதிராகவே முழக்கமிட்டார். பதிப்பாசிரியர் பெல்ட்ரினெல்லி ஒரு கம்யூனிஸ்ட் ஆரம்பத்தில். ஆனால் 1956-ல் நடந்த ஹங்கேரிய எழுச்சியில் ரஷ்யாவின் அடக்குமுறை தர்பார் கண்டு மனம் நொந்து போயிருந்தவர். அவருடைய கம்யூனிச எதிர்ப்பு அதிகமாவதற்குக் கம்யூனிஸ்ட்களின் வெறியாட்டமும் அவர்கள் பாஸ்டர்நாக் நாவலை ஒழிப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியுமே காரணமாயிற்று. "டாக்டர் ஷிவாகோ" நாவல் இத்தாலிய மொழியில் வெளி வந்தவுடன் அதன் பதிப்பாசிரியரான பெல்ட்ரினெல்லி கம்யூனிஸ்ட் கட்சியைவிட்டு வெளியேறினார். "சிந்தனைக்குத் தடை போடும் ஒரு கட்சியில், சுதந்திர எண்ணத்திற்கு வேலி கட்டும் ஒரு கட்சியில் இருக்க என் மனச்சாட்சி விரும்பவில்லை" என்று கூறுகிறார், அந்தப் பதிப்பாசிரியர்.

'நவீன இலக்கியப் படைப்புக்களிலே ஒரு மாபெரும் இடத்தை பிடித்திருக்கிறது" என்று **ஆல்பர்டோ மொரேவியா** என்ற இத்தாலிய அறிஞர் டாக்டர் ஷிவாகோவைப் பற்றி கூறுகிறார். உலகத்தில் உள்ள அத்தனை பேரறிஞர்களும் பாராட்டினர் அந்தப் புத்தகத்தின் பெருமை கண்டு. அற்புதமான எழுத்து வன்மை, திறமையான படப்பிடிப்பு, சிறந்த இலக்கிய நடை அத்தனையும் நிரம்பியிருந்தன அந்த ஏட்டில். எனவே நல்லறிவாளர்கள் பாராட்டினர். ஆனால் ரஷ்யாவோ தூற்றலைக் கணையாக கொண்டு பாஸ்டர்நாக்கைப் படாதபாடு படுத்தியது. 'துரோகி' என்றுகூட தூற்றப்பட்டார். இலக்கியத்திற்காக நோபல் பரிசுபெற்ற **பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், ஆல்பர்ட் கேமஸ், பியர்ல் பக், எலியட்** போன்றவர்கள் டாக்டர் ஷிவாகோவிற்கு நோபல் பரிசு கொடுத்தது 'அதன் இலக்கிய வளத்திற்குத்தான். அதுதான் சரி!' என வாதிட்டனர் ரஷ்யாவின் பயத்திற்கு காரணமில்லாமலுமில்லை. ஹங்கேரியாவில் ஏற்பட்ட எழுச்சி பெரும்பாலும் எழுத்தாளர்களாலும் மாணவர்களாலும் நடத்தப்பட்டது. எனவே எழுத்தாளர்களைக் கண்டு கம்யூனிச அரசாங்கம் கிலி கொள்ள ஆரம்பித்தது. எனவேதான் பாஸ்டர்நாக் நோபல்பரிசு பெருவண்ணம் தடுத்து அவர்மீது வசைபுராணத்தைப் பொழிய ஆரம்பித்தது எனினும் உலகம் உண்மையை உணர்ந்து கொண்டதை ரஷ்யாவால் மறுக்கவும் முடியவில்லை; மறைக்கவும் முடியவில்லை. அமெரிக்க அறிஞன் **மார்க் சுலோனிம்** பாஸ்டர்நாக் நாவல் அடிமைப்பட்டுக் கிடக்கும் மற்றொரு ரஷ்யாவின் குரல் என்று கூறுகிறான். **மார்கரெட் ஹிக்கின்ஸ்** 'டாக்டர் ஷிவாகோ'வைப் பற்றிக் கூறியதாவது:

"ஹங்கேரியப் புரட்சியில் மக்கள் ரஷ்ய அரசாங்கத்தை எதிர்த்து எதற்காகப் போராடினார்களோ, அதைத்தான் பாஸ்டர்நாக் தன்னுடைய நாவலில் பிரதிபலிக்கிறான். ஹங்கேரிய மக்களைப்போல் ரஷ்ய மக்களும் தங்களுக்குப் பிடிக்காத ஒரு கம்யூனிச ஆட்சியின்கீழ் அவதிப்படுகின்றனர்."

பாஸ்டர்நாக்கின் அந்த அற்புத நாவல் ரஷ்யாவில் 500 பிரதிகளாக அச்சிடப்பட்டுப் பல்வேறிடங்களில் படிக்கப்பட்டு வருகின்றது என்று தெரியவருகின்றது. சிந்தனைக்குத் தடைப் போட்ட அரசாங்கத்தின் சிறைக் கதவுகளையே என்றுவது ஒரு நாள் அது நொறுக்கும். இன்று இல்லை என்றால் நாளை; நாளை இல்லை என்றால் நாளை மறுநாள்! அதைத்தான் சுதந்திர உலகம் எதிர்பார்க்கிறது!

—**ஜோசப் பெஸ்கி பி. ஏ.**

வருந்துகிறோம்

நம் துணைப் பொதுச்செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்களின் மாமனார் ஞாயிறு திரு. குப்புசாமி அவர்கள் காலமானதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம். அன்னார் குடும்பத்தார்க்கு எம் ஆழ்ந்த இரங்கல் உரித்தாகுக.

—**ஆ-ர்**

திருத்தம்

கடந்த இதழ் எண்ணத்தின் தலைப்பு **"திபேத்தில் சநிவுடமை"** என்றுள்ளது. **"திபேத்தில் சதியுடமை"** எனத் திருத்திக் கொள்க.

—**ஆ-ர்.**

எஸ். எஸ். ஆர். நாடக மன்றம்

அளிக்கும்

புதிய நாடகம்!

ஏராளமான பொருட்செலவில் தயாராகிறது!

இலட்சிய நடிகர் **எஸ். எஸ். ஆர்.** நடிக்கும்

இராஜேந்திர சோழன்

கதை, வசனம், பாடல்கள்:

கண்ணதாசன்

பிறவிவரங்கள் எதிர்பாருங்கள்

சிவகெங்கைச் சீமை

காட்சிகள்

முத்தழகு முதியவர் வேடமிட்டான்.

துடித்தெழுந்து குமுறினான்.

சோகத்தில் மூழ்கினான்.

தூக்குக்கயிற்றை முத்தமிட்டான்.

அத்தனையும் இந்த மாமன்னர் மருதரசரின்
மானத்தைக் காப்பாற்றி

உபயணரின் பேராசையை நசுக்குவதற்குத்தான்.

தாயாக இருங்கள்!

சென்னை நகரப் 'போலீஸ்' நிலையங்களோடு தொடர்புடைய சில இடங்களில் 'காவலர்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைக் காணும் போது தமிழமக்கள் உள்ளங்களில் உவகை மிகுகின்றது ஒரு புத்துணர்ச்சி தோன்றுகின்றது. காலமெல்லாம் 'போலீஸ்' என்றே சொல்லிச்சொல்லி வந்த நிலைமாறி காவலர் என்ற ஒரு தமிழ்ச்சொல் பழக்கத்திற்கு வருகின்றதே என்ற மகிழ்ச்சி இருக்கின்றது.

இன்றைய தினம் காவல்துறைக்கு அமைச்சராய் உள்ள திரு. கனம் பக்தவத்சலனுருக்கு இது பிடிக்கவில்லை. அவருக்கு இப்படி ஒரு மாற்றம்-நல்ல தமிழின் ஏற்றம்-பிடிக்காதது ஒன்றும் வியப்பில்லை. அவரோ, அமைச்சரவையோ தமிழ்மொழி – தமிழ்நாடு – தமிழ்மக்கள் என்று எண்ணிப்பார்க்க இயலாத நிலையில் இருப்பவர்கள் என்பதுதான் நாடறிந்த செய்தியாயிற்றே!

தமிழ்மொழியின் வளர்ச்சியில் ஆர்வமும், தமிழர்மீது பற்றும் இருந்தால் சங்கரலிங்கனுரைப் பிணமாக்கியிருக்கத் தேவையில்லை. வானொலி என்றே வானொலியில் ஒலித்திருக்கும். ஆனுல் சங்கரலிங்கனுர் செத்தும் 'தமிழ்நாடு' என்ற பெயர் கிடைக்கவில்லை; வானொலி என்று சொல்வதற்கு வாய் வரவில்லை. ஆகையினுல் இவர்கள் ஆட்சியில் தமிழ்மொழிக்குத் தக்க ஏற்றம் கிடைத்திடும் என்று எண்ணி இயலாது.

ஆனுல் வெளிப்படையாகத் தங்கள் நிலையை எடுத்துச் சொல்லிடாமல், விளக்கிடாமல் சுற்றி வளைத்துப் பேசிடுவதுதான் விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

"'தமிழ்நாடு தமிழ்நாடு' என்று கத்துகின்றீர்களே. ஏது தமிழ்நாடு? இலக்கியங்களிலே இருக்கிறதா அந்தப் பெயர்?" என்று கேட்டனர். உடனே தமிழ்ப்புலவர்களும், தமிழ்மக்களும், உள்ள தமிழ் இலக்கியங்களை எல்லாம் பிரித்து அமைச்சர்களின் முன்னே நீட்டி, அங்கே 'தமிழ்நாடு' என்ற பொருள் கொண்ட இடங்களை எல்லாம் சுட்டிக்காட்டி "இனி இப்படிப் பேசாதீர்; சிறுவரும் ஏளனம் செய்கின்றனர், உமது சிறுமை கண்டு" என்று எடுத்துச் சொல்லினர்.

அதன் பின்னராவது அமைச்சர்கள் தங்களால் 'தமிழ்மொழிக்கு நன்மை செய்ய இயலாவிட்டாலும், பிறர் செய்கின்ற நன்மைகளையாவது கெடுக்காமல் இருக்கலாம். ஆனுல் அப்படி இருந்திடமுடியுமா அவர்களால்? போலீஸ் என்ற ஆங்கிலச் சொல் இருந்த இடத்தில் காவல் என்ற தமிழ்ச்சொல் இடம் பெறுகின்றது. இதைக் கண்டு பொருத அமைச்சர் எரிந்துவிழுகின்றுர். கேலி பேசுகின்றுர். "போலீஸ் என்ற சொல்லின் முழுப்பொருளும் 'காவல்' என்பதில் அடங்கவில்லை. ஆகையினுல் காவல் வேண்டாம். வேறு பொருத்தமான சொல் கிடைக்கின்ற வரை போலீஸ் என்பதே இருக்கட்டும்" என்பது அவர் சொல்லிடும் அரிய தத்துவமாகும்.

இந்தக் கூற்றை ஆராயும் முன் ஒரு அடிப்படை உண்மையை நினைவுபடுத்திக்கொள்வது மிகவும் பொருத்தமான செயலாகும்.

ஒரு மொழியிலிருந்து ஒரு சொல்லையோ கருத்தையோ இன்னெரு மொழிக்குப் பெயர்க்கும்போது, எந்த மொழிக்குப் பெயர்க்கின்றேமோ அதன் இயல்புக்கு ஏற்றவாறு எடுத்தமைத்தல் வேண்டும் என்பது மொழியியலில் முக்கியமாகக் கைக்கொள்ள வேண்டிய ஒரு கருத்து.

காட்டாக: அவன் என்னை அன்போடு பார்த்தான் என்பதைக் கொஞ்சம் நயமாகச் சொல்ல வேண்டுமானுல், "பார்வையில் கனிவு இருந்தது, குளிர்ச்சி இருந்தது!" என்று சொல்லுகின்றேம். இது வெப்பமான நாடானதினுல் குளிர்ச்சி விரும்பப்படும் பண்பாகிறது. ஆகையினுல் அது பொருந்துகின்றது. இதை அப்படியே ஆங்கிலத்தில் எழுத வேண்டுமானுல் எப்படி எழுதுவது?

'Cold' என்ற சொல் குளிர்ச்சி என்ற பொருள் தரும். ஆகையினுல் 'cold look' என்று எழுதிவிடலாம் அல்லவா? அதுதான் கூடாது! 'cold look' என்றுல் வெறுப்பு-கடுப்பு-கலந்த பார்வை என்பது பொருள் ஆங்கில மரபுப்படி. அப்படியானுல் ஆங்கிலத்திலே எப்படி எழுதுவது? 'warm look' என்று எழுத வேண்டும். இதற்குத் தமிழிலே என்ன நேர்ப் பொருள்? 'சூடான பார்வை!'

ஆகையால் ஆங்கிலத்திலிருந்து தமிழிலோ, தமிழிலிருந்து ஆங்கிலத்திலோ பெயர்த்தெழுதும்போது **சொல்லின் அகராதிப் பொருள் என்ன என்பதைப் பாராமல் அந்தச் சொல் உணர்த்தும் கருத்து என்ன என்று அறிந்து அதற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.**

போலீஸ் என்பதற்கு அகராதியிலே என்ன பொருள் இருக்கிறது என்று பார்த்துவிட்டு, அதற்கு இது பொருந்தவில்லை என்று சொல்வது–மன்னிக்க வேண்டும்–மொழியறிவு–இல்லாதவர்கள் – தெரியாதவர்கள் மரபு உணராதவர்கள் செய்யும் பிழையாகும். ஆகையால் அமைச்சர் போலீசுக்குக்காவல் பொருந்தவில்லை என்று கொக்கரிக்க வேண்டாம்.

அதை மட்டுமாவது அவர் சொல்லியிருப்பாராயின் அவரது மொழிப் பயிற்சியை மெச்சிக்கொண்டிருக்கலாம். இவரல்லவா 'தமிழ் வளர்க்கும் பெருமாள்' என்று புகழ்ந்து பல்லாண்டு பாடியிருக்கலாம். ஆனுல் அமைச்சர் தம்முடைய உள்ளத்து மறைந்திருக்கும் கருத்தினை அடுத்து அறிவிக்கின்றுர். "நல்ல பொருத்தமான சொல் கிடைக்கின்றவரை போலீஸ் என்பதையே பயன்படுத்தலாம்" என்கிறுர்.

உண்மையான தமிழ்ப் பற்று இருந்தால் இப்படிச் சொல்ல வருமா?

காவல் என்பது சரி இல்லை என்றே வைத்துக்கொண்டாலும், அதனுல் கெடுவது ஒன்றும் இல்லை. நல்ல சொல் வரும்போது காவல் என்பதை எடுத்து விட்டுக் கிடைக்கும் அந்தச் சொல்லைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதை விட்டுவிட்டு–காவல் வேண்டாம், போலீஸ் என்பதே போதும் என்றுல் என்ன சொல்வது?

சின்னக் குழந்தை எழுந்து நடக்க முயலுகின்றது. தவறி விழுகின்றது. மறுபடியும் எழுகின்றது. சிறிது நேரம் நிற்கின்றது; பிறகு விழுகிறது; மறுபடியும் எழுகிறது: விழாமல் இருக்க முயலுகின்றது; முடியவில்லை. இப்படிப் பல முறை முயன்றுல் இறுதியில் அது வெற்றியடையும். **நல்ல தாயாக இருந்தால் எழும்போது கண்டு மகிழ்ந்து, விழும்போது காணச் சகியாது வருந்தித் தாங்கித் தடுத்து, நிற்கப் பழக்க வேண்டும்.** அதை விட்டுவிட்டு 'நீ விழுவாய் ஆகையால் எழவே கூடாது' என்றுல் அந்தக் குழந்தை என்றுதான் எழுந்து நிற்கும்?

வளர்ச்சிக்கு உதவாவிடினும் தடையாவது செய்யாமல் இருக்கலாம் அல்லவா? நிற்கும் குழந்தையைப் பிடித்து இழுத்துத் தள்ளிவிடும் பெண்ணைத் தாய் என்று சொல்லமுடியும்? யாரோ பொருமைக்காரி என்றுதானே கூற வேண்டும்?

காவல் சரியான சொல் இல்லை என்றுமட்டும் சொல்வதோடு, நான் கண்டுபிடிக்கிறேன் என்று அமைச்சர் முன் வந்திருப்பாரானுல் அவரைப் பாராட்டலாம். ஆனுல் அவரோ சரியான சொல் கிடைக்கும் வரை போலீஸ் போதும் என்கிறுர்.

எழுந்து நிற்கும் குழந்தையை இழுத்துத் தள்ளுகின்றுர். தாய் என்று அவரை ஒப்புக்கொள்ளுவீரா?

கட்டிய வீட்டிற்குக் குறை காரணம் இன்றிச் சொல்லுகின்றுர் அமைச்சர்.

உண்மையிலேயே அமைச்சர் 'நல்ல தமிழ்ப்பற்று எனக்கும் இருக்கிறது' என்பதை நாடறியச் செய்ய விரும்பினுரானுல் காவல் என்ற சொல்லைப் பயன்படுத்திய முயற்சியைப் பாராட்டி ஊக்கியிருக்கவேண்டும் ஆனுல் ஊக்கம் தருவதற்கு மாருகக் கேலிபேசுவது விந்தையாகத்தான் இருக்கிறது.

'சரி. அமைச்சர் சொல்வது அப்படி என்ன பொருளற்ற வாதமா?' என்று சிலர் கேட்கக்கூடும். ஆகையினுல் அதைச் சற்று ஆராய்வோம்.

காவல் என்பது 'போலீஸ்' என்ற சொல் உணர்த்தும் எல்லாப் பொருளையும் தரவில்லை என்கிறுர்.

'போலீஸ்' என்பதற்கு ஆங்கில அகராதியில் 'சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பயன்படும் ஒரு அமைப்பு' என்று பொருள் தரப்படிருக்கிறது. உடைமைக்கும் உயிருக்கும் ஆபத்து விளையாமல் பாதுகாப்புத் தரும் அமைப்பாகவும் அது அமைந்திருக்கிறது.

'காவல்' என்ற சொல்லிலே இந்தப் பொருள் இல்லையா? இருக்கிறது. ஆனுலும் ஏன் அமைச்சர் சரி இல்லை என்கிறுர்? ஏதாவது காரணம் இருக்கவேண்டும் அல்லவா? மிகுந்த அனுபவம் மிக்கவர் ஆயிற்றே அவர். நெடுநாள் அமைச்சராக இருக்கின்றவர். அமைச்சர் வேலைக்கு 'பிஞ்சின்' கொடுப்பதானுல் அது அமைச்சர் பக்தவத்சலனுருக்குத்தானே கிடைக்கும்!

'போலீஸ்' என்ற சொல்லுக்கு உரியவர்களாக இருந்தவர்களுக்கு முன் நாட்களில் ஏராளமான பணிகள் இருந்தன, மேற்கு நாடுகளில். இப்போது இங்கு உள்ள போலீஸ்காரர்களின் கடமை 'அமைதியும் காவலும்' மட்டுமே. அமைச்சர்களைச் சுற்றிப் புடைசூழ நிற்பது 'அவசர கால' ஏற்பாடு!

அங்கே ஒரு காலத்தில் காவல் தொழில் புரிந்தவர்களை மட்டும் அல்லாது, தெருக்கூட்டுவோர், தெருவிளக்கு அமைப்போர் ஆகியோருக்கும் போலீஸ்காரர் என்ற சொல் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது! அதை மனதிலே வைத்துக்கொண்டு அமைச்சர் போலீஸ் என்ற சொல்லின் முழுப் பொருளும் காவல் என்பதில் அடங்கவில்லை என்கிறுரா? அப்படியானுல் காலத்தோடு அடியிட்டு நடக்காதவர் என்று கருதுவதா? அல்லது போலீஸ்காரர்கள் இப்போதும் அந்தக் கடமைகளைச்செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறுரா? அந்தக் கடமைகளைச் செய்வதில் இழுக்கு ஒன்றும் இல்லை. ஆனுல் போலீஸ்காரர்களுக்கு இப்போது அதற்கெல்லாம் நேரம் எங்கே இருக்கிறது?

நித்த நித்தம் எவராவது வருவதும், வருவார்கள் என்று வழிபார்த்து நிற்பதுமாக, போலீஸ்காரர்கள் வெயிலில் நின்று வேகின்றுர்களே!

அதுதான் போகட்டும் காவல் என்ற சொல் எப்படிப் பொருந்தவில்லை என்று அமைச்சர் கருதுகின்றுர் என்று விளங்கவில்லை.

'காவல்' என்றுல் பார்த்துக்கொள்வது என்ற ஒரு பொருளை மட்டும் மனதிலே நினைத்துக்கொண்டு அது பொருந்தவில்லை என்று கூறுகின்றுர் என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது.

காவல் என்ற சொல்லுக்குப் பார்த்துக்கொள்வது என்ற ஒரு பொருள்மட்டும் அல்ல; வேறு எத்தனையோ பொருள்களும் உள்ளன.

காவல்: அரண்; கவசம்; காத்தல்; சிறைச்சாலை; மதில்; வேலி; பாதுகாப்பு; பரண்; ஆட்சி.

காவல் என்ற சொல்லுக்கு இத்தனை பொருள்கள் இருக்கின்றன என்பது எந்தத் தமிழ் அகராதியைப் பார்த்தாலும் விளங்கும். இதில் எத்தனை வகையான கடமைகள் அடங்கியிருக்கின்றன என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறேம். எண்ணிப் பார்த்த பின் துணிந்து கூறட்டும், உண்மையிலேயே 'போலீஸ்' என்ற சொல்லுக்கு உள்ள பொருள் எல்லாம் காவல் என்ற சொல்லில் அடங்கவில்லையா என்பதை.

மா.கி.தசரதன், எம்.ஏ.

காவல் என்ற சொல்லும், அதை ஒட்டி எழுந்துள்ள காவலர், காவலன் என்ற சொற்களும் தமிழ் இலக்கியங்களில் ஏராளமான இடங்களில் வந்துள்ளன. சில இடங்களை இங்குக் காண்போம்;

புறநானூற்றில் காவல் என்பது காக்கப்படும் நாடு என்ற பொருளிலும், காவலர் என்பது காக்கும் அரசர் என்ற பொருளிலும், நாட்டை ஆளும் ஆட்சி காவற்சாகாடு என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

திருக்குறளில் காத்தல் என்ற சொல் தடுத்தல் என்ற பொருளிலும் பாதுகாத்தல் என்ற பொருளிலும் வந்துள்ளது.

சிலப்பதிகாரத்தில் காவலர் என்ற சொல் விளக்கமான பொருளில் ஆளப்பட்டுள்ளது.

சிலம்பைக் கொண்டு வந்து மன்னனிடம் காட்டும் பொற் கொல்லன், "கல்லென்பேரூர்க் காவலர் கரந்து என் சில்லைச் சிறுகுடி" என்று கூறுகின்றான். காவலர் கரந்து, காவலர்க்குத் தெரியாமல் மறைந்து என்று பொருள் கூறப்படுகின்றது. இங்கு காவலர் என்றால் அது 'போலீஸ்' என்று இன்று அழைக்கப்படும் சொல்லின் பொருளைத் தரவில்லையா?

"'கோவலனைக் கொன்று வரவேண்டும்' என்ற கட்டளை இடுவதற்காக மன்னவன் ஊர்க் காப்பாளரைக் கூவினான்" என்றும் சிலம்பு சொல்கிறது. இவ்வாறு எண்ணற்ற இடங்களில் காவல், என்ற சொல்லும் காவலர் என்ற சொல்லும் வந்திருக்கின்றன. அவை குறிக்கும் பொருள்கள் இன்றைய தினம் 'போலீஸ்காரர்' செய்யும் கடமைகளையே குறிக்கின்றன.

கா என்ற ஒரே எழுத்து சொல்லாக நின்று, **பூங்கா, காத்தல்** என்ற இருவகைப் பொருளை உணர்த்தும். கா என்ற சொல் அடிச் சொல்லாக இருந்து ஒரு ஆளைக் குறிக்கும்போது

கா + வலன் : காக்கும் (தொழிலில்) வல்லவன்

என்ற பொருளைத் தருகிறது.

நா + வலன் : நாவில் வல்லவன்
பா + வலன் : பாவில் வல்லவன்

என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

காவல் என்பது வினைச் சொல்லாக நிற்கும்போது அன் என்ற ஆண்பால் ஒருமை விகுதி சேர்ந்து

காவலன் :

காத்தல் தொழில் செய்பவன் என்ற பொருளைத் தருகிறது,

'வேண்டாம்; இவ்வளவு இலக்கணம் வேண்டாம் சாதாரண. முறையிலேயே விவாதிப்போம்' என்று அமைச்சர் எண்ணுவாராயின் அவருக்கு வேறு வகையாக உண்மையை எடுத்துச் சொல்ல முயலுவோம்.

காவலன் என்பது 'போலீஸ்' என்ற சொல் உணர்த்தும் எல்லாம் பொருளையும் தரவில்லை என்றே வைத்துக்கொள்வோம். அதனால் அது பொருத்தமற்ற சொல் என்று விட்டுவிடமுடியுமா?

'மினிஸ்டர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'அமைச்சர்' என்று சொல்லுகின்றோம். 'மினிஸ்டர்' என்பதற்கு ஆங்கில அகராதியில் நாட்டை ஆளும் பொறுப்பில் உள்ளவர், மதகுரு, என்ற பொருள்கள் உள்ளன. அதே சொல் வினைச்சொல்லாக வரும்போது 'உதவிசெய்' என்பது பொருளாகிறது. இத்தனை பொருளையும் தரவில்லை என்பதற்காக அமைச்சர் என்ற சொல்லை விட்டுவிடவில்லை; வெறுத்துவிடவில்லை. தூய தமிழ்ச்சொல் அமைச்சருக்குப் பிடிக்கவில்லை என்றாலும் மந்திரி என்ற சொல்லைப் பயன்படுத்த அஞ்சுகின்றார். அச்சகத்தில் எழுத்துக் கோக்கும்போது ஏதாவது ஒரு எழுத்தை விட்டுவிட்டால் பொருள் மாறிவிடுமோ என்ற அநுபவ அச்சமோ காரணமோ என்னவோ! அதேபோல் 'டீச்சர்', 'எடிட்டர்' என்ற இரு சொற்களைத் தமிழில் ஆளும்போது 'ஆசிரியர்' என்ற ஒரே சொல்லால் குறிக்கிறோம். இரண்டுக்கும் பொருளில் வேறுபாடு இருந்தாலும், ஆசிரியர் என்ற ஒரே சொல்லை வைத்துக்கொண்டு அந்த வேறுபாட்டை வென்றுவிடுகின்றோம். **இது நமது மொழியின் இயல்பு; சிறப்பியல்பு**

'லீடர்' சேர்மேன்', 'பிரசிடெண்ட்' என்ற சொற்களுக்குப் பொதுவாகத் 'தலைவர்' என்ற சொல்லை ஆளுகின்றோம். அதனால் ஒன்றும் கேடு வந்துவிடவில்லை. பொருள் விளங்காமல் யாரும் தவித்துக்கொண்டில்லை.

மொழி இயல்பு, மொழிமரபு என்று சில அடிப்படை வழிகள் உள்ளன. அந்த வழிகளில்தான் மொழி செல்லும். அதை அறிந்து கொள்ளாமல் 'போலீஸ்' என்றால் 'காவல்' பொருந்தவில்லை. என்று பொறுப்பில்லாமல் பேசி, அதனால் **வளர இருக்கும் மொழிக்கு வாட்டம் தரவேண்டாம்** என்று அமைச்சரை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

'காவல்' பொருந்தவில்லை என்றால், பொருத்தமான சொல் கிடைக்கும் வரை இதையே வைத்துக்கொண்டு பொறுத்திருப்போம் என்பதுதான் மொழிப்பற்று. வேண்டாம் நான் 'போலீஸ்' என்பதிலேயே புகுந்திருக்கின்றேன் என்றால் அது **மொழிப் பகை** என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது.

விழும் குழந்தையைக் கண்டு கேலி பேச வேண்டாம். அழும் குழந்தைக்கு ஆறுதல்சொல்லுங்கள் அமைச்சரே! ★

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
[illegible], திண்டுக்கல் ரோடு, மதுரை.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

தலாய்லாமாவுக்கு 24-ம் பஞ்சன் லாமாவுக்கு 22-ம் வயது ஆயின. மெத்த இளையோராயினும் வகிக்கும் பதவிகளால் இவர்களை வணங்கும் மனிதர்களும் காணிக்கை வழங்கும் அடியார்களும் அநேகர்.

பஞ்சன்லாமா

முன்பிருந்த ஒரு தலைலாமா தனது குருவுக்கு மரியாதை செய்வதற்காக அவருக்குப் பஞ்சன்லாமா என்று ஒரு புதுப் பதவியை உருவாக்கித் தந்தார். தலைலாமாவுக்கு அடுத்து பஞ்சன்லாமாவே மரியாதைக்குரியவர் என்றும் அறிவித்தார். அந்தப்படி தொடர்ந்து வந்த பதவியிலிருக்கும் இப்போதையப் பஞ்சன்லாமாதான் வில்லனாகக் காட்சியளிக்கிறார். நாம் பௌத்த அடியாரை புத்தபிக்கு என்கிறோம். திபேத்தியர் "லாமா" என்பர்.

ஆண்டு தோறும் ஒரு நாள் திபேத்திலுள்ள லாமாக்கள் அனைவரும் தலைலாமாவின் இடத்தில் கூடுவர். தலைலாமா மதம்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், தமக்கேற்பட்ட ஐயங்களை தலைலாமாவிடம் கூறி சிறிய லாமாகள் விளக்கம் பெறுதல் முதலியனவும் நிகழும்.

ஏன்?

இதுவரை பார்த்தவற்றால் இந்நாட்டில் பெரும்வளம் கிடையாது; சுரங்கங்கள் இல்லை; வயல் விளைச்சலும் போதுமான அளவு கிடையாது; வேறு எந்த செல்வக் கொழிப்பும் கிடையாது என்று அறிகிறோம். பின் ஏன் இந்த நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற, சீனம் துடிக்கிறது? பனிப்படலத்திடைச் செங்குருதி ஆறாய்ப் பாய்ச்சப்படுவதேன்?

சீன-திபேத் உறவுகள்

சீனாவுக்கும் திபேத்திற்கும் வெகு நாளாய்த் தொடர்புண்டு மதவழியில். சீனாவைச் சேர்ந்த பல பிக்குகள் திபேத்திற்கும், திபேத்திய பிக்குகள் சீனாவிற்கும் வந்து போயிருக்கின்றனர். இரு நாட்டினரும் ஒரேமாதிரி உருவ அமைப்புக்கொண்டோராயும், ஒரே மதத்தினராயும் இருந்தமையால் பலர் இருவரும் ஒரே நாட்டினர் என்றெண்ணவும் இடமாயிற்று. கி. பி. 629-ஐச் சேர்ந்த **மஞ்சுஸ்ரீ மூலகல்பா** என்ற நூலில் "**சீனதேசா**" என்று இது குறிக்கப்பட்டுள்ளது. மகா சீனத்தின் ஒரு பகுதி என்ற பொருளிலேயே அப்படிக் குறிக்கப்பட்டதாக வாதிடுவோரும் உண்டு. உண்மையோ அதுவன்று. எப்படி அமெரிக்காவைக் கண்டுபிடித்துவிட்டு, இந்தியாவைக் கண்டுவிட்டதாகக் கொலம்பஸ் ஏமாந்தானோ அதேபோன்றுதான் இதுவும். சீனத்திற்கு திபேத்தைக் கடந்துதான் போகவேண்டும். அதையறியாத எவனோ சீனம் போகக் கருதிச்சென்ற வழியில், திபேத்தை அடைந்தவுடன் தான் சீனத்தையே அடைந்துவிட்டதாகக் கருதித் திபேத்தை சீனதேசா என்று எழுதியிருக்கிறான். அதை வைத்துக்கொண்டு சீனாவின் ஒரு பிரிவே திபேத் என்று வாதிடுவதும் தவறு.

கலைவழியாய்ப் பார்த்தாலும் திபேத்தியக் கலைகளுக்கும் கலைப்பண்பாடுகளுக்கும், வடஇந்தியக் கலைகள்—கலைப் பண்பாடுகளுடன்தாம் ஒற்றுமைகள் உள்ளன சீனக் கலைக்கும் திபேத் கலைக்கும் எத்துணையோ வேறுபாடுகள் இருக்கையில் எப்படி அவற்றை ஒன்றெனல் தகும்?

மற்றும் திபேத்தைப் போலவே சீனாவின் அருகில் உள்ளவைதாம் பர்மாவும் தாய்லாந்தும். அதனால் அவற்றை சீனாவின் பகுதிகள் என்பது எவ்வளவு தவறோ, அவ்வளவு தவறு திபேத்தைச் சீனாவின் பகுதி என்பதும். இந்தியாவின் கீழே ஏறக்குறைய 80 கல் தொலைவில்தான் உள்ளது ஈழம். அதனால் ஈழத்தை எப்படி இந்தியாவின் உறுப்பென்று சொல்லலாம்?

திபேத் சீனத்தின் எல்லையில் உள்ளது. திபேத்தின் வழியாக யாரும் படை எடுத்து வந்து தன்னைத் தாக்கக்கூடும் என்ற அச்சம் சீனத்திற்கு உண்டு. சீனத்தை ஆண்ட மன்னர் பரம்பரையினர் பலரும் அவ்வப்போது திபேத்தைக் கைப்பற்ற முனைந்ததுண்டு. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்திருக்கின்றன. இந்தியாவை ஆண்ட வெள்ளையரும் எல்லைப்பகுதி என்ற நோக்கில் அதைத் தம் வசமாக்க முனைந்ததும் உண்டு. 1904-ல் பிரான்சிஸ் யங்ஹஸ்பெண்ட் என்ற வெள்ளைப் படைத் தலைவன் லாசாவைத் தாக்கிக் கைப்பற்றினான். ஆங்கிலக் கருவிகளுக்கு முன் திபேத்தியரின் வில்லும் வாளும் என் செய்யும்?

பின்னர் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டால் சீனப் பேரரசும் ஆங்கிலப் பேரரசும் திபேத்தை விட்டு வெளியேற ஒப்பின.

— அடுத்த இதழில் முடியும் —

விற்பனையாகிறது!
கம்யூனிஸ்ட்களின் கொள்கைக் குழப்பங்களை கோணல் பாதையைத் தெளிவுபடுத்தும் ஏடு!
கழகக் கொள்கையும் கம்யூனிஸ்ட்கள் எதிர்ப்பும்
கே. ஆர். சபாபதி எழுதியது
டாங்கே காட்டும் திராவிடம், இலங்கைத் தமிழருக்கிழைத்த துரோகம், மாஜினிக்குப் பதில், சிறப்பான பகுதிகள்.
விலை 0-50 புதிய காசு. கழிவு 25%. தபால் செலவு தனி.
உரிமையாளர்
மாறன் பதிப்பகம்,
மேல்பட்டாம்பாக்கம் (அஞ்சல்) தென்னாற்காடு மாவட்டம்.



நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

இதுதான் திராவிடநாடு

"மொழியிலே. தமிழ்மொழியில் திசைகளுக்கு அமைந்த சொற்களிலே எல்லை கூட்டி, மொழி எல்லையே இன எல்லையாக, இன எல்லையே நாட்டெல்லையாக, நாட்டெல்லையே பண்பாட்டின் அக எல்லையாகக் கொண்ட நானிலம், ஐந்திணை அளாவிய முழு நிலம் பண்டைத் தமிழகப்-இன்றைய தென்னடு—அதுதான் திராவிடம்"

எது திராவிடம்? யார் திராவிடர்? எது திராவிடத்தின் பரப்பு? என்ன அதன் பண்பாடு? இத்தகைய பல வினக்கள் தமிழகத்தில் இன்றும் எழுகின்றன. புரிந்துகொண்டே, அரசியல் கருத்து வேறுபாட்டால் இவ்வினக்களைத் தொடுப்போர்பற்றி நமக்குக் கவலையில்லை! புரியாத மக்கள் பன்னூறு பேர் உள்ளனர்; பல்லாயிரம் ஊரார் உண்டு. தம் இனமும், தம்மொழியும், இனிய தம் கலையும், நெடிய தம் புகழ்பாடும் பண்பாடும் எவையெவை என்றுணராததால் விழிப்பற்றுக் கிடப்போர் அன்னர். தாய்நாடும் திருமொழியும் எவையெவை என்று உணர்த்தப் பட்டுவிட்டால் அன்னரும் விடுதலைப் படையில் சேர்வர்; தென்னடும் விடுதலை பெறும்; உறுதி! உண்மை! உயிர் நிகர் ஆசை வெல்லும். இதை மனதில் கொண்டு பன்மொழிப் புலவர் செய்த தொண்டு விளக்கத்தின் பெயர்தான் "இதுதான் திராவிடநாடு!" என்பது. ஆயிரம் வேலும் வாளும் வடித்துத் தருதலைவிட, மனதில் விடுதலை உணர்வை வளர்க்கும் கருத்துகளைச் செலுத்திவிடின் போதும்; அவற்றின் விளைவு பெரிதாகும். இதை மனதில் கொண்ட பன்மொழிப் புலவர் அவர்கள், எதிர்ப்பாளர் எழுப்பும் வினக்களுக்குப் பதிலிறுத்தார். அவை "தென்ற"லில் கட்டுரை வடிவாய் வந்தன. ஆய்வுரைக் கொத்தான அதைத் தொடர்ந்து படித்து மகிழ்ந்தவரும் எண்ணிலர்.

தெளிவான விளக்கம் அளித்திடும் அக்கட்டுரைகள் நூலுருவில் வெளியாகியுள்ளன. சென்னை-பிராட்வேயிலிருக்கும் "மலர் நிலையம்" என்னும் பதிப்பகத்தார் இம்முயற்சியை முடித்துள்ளனர். 1-ம் பக்கத்தி லிருந்து 145-ம் பக்கம்வரை அறிவுக் கனிகள் வரிக்கு வரி குலுங்குகின்றன.

நூலின் தொடக்கத்திலேயே திராவிட நாட்டின் அமைப்பும் பரப்பும் சொல்லப்படுகின்றன. அடுத்தடுத்து, அந்நாடு வெளி நாடுகளுடன் பண்டை நாளில் கொண்டிருந்த தொடர்பும் வணிக வளமும் விளக்கப் படுகின்றன.

அடுத்து இடைக்காலத்தில் தென்னவர் கடற்படை நடாத்துதலிலும் கடல் வணிகம் செய்தலிலும் கொண்டிருந்த பெருமைகளைக் குறிக்கும் தொடர்கள் இவை: **"தைமூருப், நாதர்ஷாவும், அகமதுஷா அப்துராணியும் அதை (வடக்கைச்) சூறையாடிக்கொண்டிருந்த அதே காலத்தில் தென்னட்டவர் இலங்கையையும் இந்துமாக் கடல் தீவங்களையும் தென்கிழக்காசியாவையும் படையெடுத்துச் சென்று திறைகொண்டு விறுடன் ஆண்டனர்"**

கடல் செல்வங்களையும் விவரித்துவிட்டு, "எல்லை எது?" என்று தொல்லை தருவார்க்குப் பதில் அளிக்கிருர். "திராவிடத்தின் எல்லை இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. தேசியமும் அவ்வண்ணமே" என்கிருர்.

கடலாட்சியும் கடற்படையும் நம்மிடம் வலிவு பெற்றிருந்தன. சாணக்கியனும் (கி. மு. 4-ம் நூற்ருண்டு) மார்க்கோ போலோவும் (கி. பி. 14-ம் நூற்ருண்டு) நெடுங் காலம் இடை வெளி உள்ளோர். ஆனல் இருவரும் தம் தம் நாள்களில் திராவிடக் கடல் வணிகத்தின் சிறப்பைத் தெளிவாக எடுத்தெழுதியுள்ளனர். கி. பி. 2-ம் நூற்ருண்டில் சோழன் கடாரத்தை வென்ருன் என்பது நம் கடல் வலிவைக காட்டுவது. ஆந்திர பேரரசர் தம் நாணயத்தில் பாய்மரக்கலங்களின் சின்னங்களைப் பொறித்திருந்த சேதி அரசரிடை கடற்படைக்கு இருந்தமதிப்பைக் காட்டுகிறது. இவையும் இவைபோன்ற பல்வேறு குறிப்புக்களையும் தொகுத்துத் தந்து நம் பெருமையை விளக்குகிருர் அப்பா. அடுத்ததாக, திராவிடம் என்ற சொல்லின் தூய்மையையும் தனிமையையும் ஆய்கிருர்; திருத்தந்தை ஹீராஸ் "மேற்கே நடு நிலக்கடல் நாடுகளில் பரவிய திரையர் பண்டைத் திராவிட இனத்தவரே" என்று கூறியதையும் பிறவற்றையும் கொண்டு திராவிடர் பரவிய பான்மையை விவரிக்கிருர். "தோற்று விட்டாலும் விடாது வாதாடும்" பண்புடைய சில ஏமாற்றுக்காரர்கள் இன்னும் "திராவிடம்" பிறமொழிச் சொல் என்று கூறுவதைக் கண்டிக்கிருர். அப்படியே வாதத்திற்காகக் கொண்டாலும், **"குற்றத்தைச் சொல்கின்ற காங்கிரசாரும் கம்யூனிஸ்ட்களும் சோஷலிஸ்ட்களும் தம் இயக்கப் பெயர்கள் எம்மொழியின என்பதை நினைக்கத் தவறிவிட்டனரே!"** என்பதாகச் சுட்டுகிருர். தேயாத பழம் பெருந் தமிழ் என்ற பொருளில் "திராவிடம்" வழங்கப்படுவதை விளக்கி, இச்சொல்லை ஆரிய ஆசிரியர்களும் ஒப்புக்கொண்டதைக் காட்டுகிருர். பரிதிமாற் கலைஞர் என்ற விளாச்சேரிப் பார்ப்பனர் தம் பெயருள்பட எதையும் தமிழிலேயே பேச விழைந்தவர். அவர் திராவிடம் தமிழ்ச் சொல்தான் என்பதாகக் கொண்டு வழங்கியிருப்பதைக் காட்டுகிருர். (பக் 120)

பொதுவாக, நில நூலறிவு, வரலாற்றுப் புலமை, இலக்கிய ஆய்வு ஆகிய பலவற்றைக் குழைத்து இணைத்து எழுதுவதாகும் இதுபோன்ற ஆராய்ச்சி நூல்கள். பொறுமையாக, பல மொழியிலும் பல துறை நூல்களையும் பயின்று அங்கங்கே ஒளிமணிகளைத் தேடியெடுத்துக் கோர்த்துத் தருவதற்கு, நல்ல தியாக உள்ளமும் வேண்டும். பன்மொழிப் புலவர் இந்தப் பணியைச் செவ்வனே செய்து முடித்திருக்கிருர். தான் பெற்ற இன்பத்தை இந்தத் திராவிடமும் பெற வழங்கியுள்ளார்.

மொத்தத்தில், இது திராவிட இனத்தார்க்கு வழிகாட்டி; திராவிட நாட்டினர்க்கு மயக்கம் அறுக்கும் மாமருந்து; ஆராய்ச்சி மாணவர்க்குக் கருவூலம்.

திராவிடர் இதனைக் கற்றுணர்ந்து பயன்பெறுதலே வாழ்க்கைப் பயன்.

ஆசிரியர்: **பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் எம்.ஏ., எல்.டி.**
வெளியீடு: **மலர் நிலையம், சென்னை-1.**
விலை ரு. 2-8-0.

★

இங்கிலாந்தில் ஒரு தி. மு. க.

இன வழியாகப் பிரிந்து தமக்கென ஓராட்சியை அமைத்துக்கொண்டால்தான் அமைதியும் ஆனந்தமும் பெருகும் என்ற கொள்கை வலுப் பெற்றுவரும் நாள் இது. கோனட்சி நீக்கிக் குடியாட்சி அமைப்பதோடு நின்றுவிட்டால் போதாது; அக்குடியாட்சி நம்மை நாமே ஆளும் ஆட்சியாக மாறினல்தான் நன்மை கிட்டும் என்ற புதுமைக் கருத்து இன்று எழுச்சியுடன் திகழ்கிறது. இந்த ஜனநாயக மரபு, கோரும் மக்களின் எண்ணிக்கையைப் பொருத்து அல்லாமல் எண்ணத்தைப் பொருத்தே வெற்றி பெறுகிறது. நான்கு மொழி பேசும் (ஏறக்குறைய) பத்துக்கோடி மக்களாகிய நாம் நடத்தும் தி. மு. கழகத்தைக் கேலி செய்வோர்க்கு, உலகத்தின் பல நிகழ்ச்சிகளும் எழுச்சிகளும் மேலே சொன்னவாறு நடந்திருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளோம். அந்தப் பணியில் ஒரு பகுதியாய்த் தோழர் ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் இந்நூலின் வாயிலாய் 8000 சதுர மைல் பரப்பும் 25 இலட்சம் மக்களும் வாழும் வேல்சின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிருர். வேல்ஸ் மக்கள் தாம் ஒரு தனித் தேசிய சமூகத்தவர் என்றும், தம் தனி மொழியும் கலைப்பண்பும் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் நடத்தும் இயக்கமாகிய பிளேட்சி முறுவை அறிமுகப்படுத்துகிருர். மேலும் சுதந்தரம், சமாதானம் உரிமை-கடமை, தேசிய எழுச்சி, தேசிய சமூகம் ஆகியவற்றின் இலக்கணங்களைப் பலதரப்பாரின் தக்க குறிக்கோள்களுடன் எளிய பான்மையில் விளக்கியுள்ளார். சரளமான நடையும் அழகிய அச்சும் கொண்ட இந்நூல் அளவில் சிறியதுதான்; ஆனல் சொல்லும் பொருளில், விளக்கும் கருத்தில் பெரியது; வலியது.

ஆசிரியர்: **ஆர். எஸ். பாண்டியன்,**
வெளியீடு: **கலையரசி பதிப்பகம், 27, குட்டிநாயக்கன் தெரு, சென்னை-2.**
விலை அணு எட்டு.

—முத்துவேலன்

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

மூன்ருவதாக, கண்ணகியின் பெற்ருேரிடம் கூற கண்ணகியின் தாய் உயிர் துறக்க, தந்தை துறவு பூண மாடலன் விடை பெறுகின்ருன். மூன்று உயிர்களை, நடந்து போன ஒரு கொலைக்கு ஈடாக்குகின்ற மாடலன் நல்ல குணம் உடையவன் என்று என்னல் எண்ண இயலவில்லை.

இம்மூன்று கொலைகளும் நடப்பதற்கு நானே காரணம் என்று மாடலனே கூறுகிருன். ("என் வாய்க் கேட்டோர் இறந்தோருண்மையின், நன்னீர்க் கங்கையாடப் போந்தேன்") பாண்டியன் "கொன்றச் சிலம்பு கொணர்க" என்று ஒரு சொல் தவறிக் கூறியமையால் ஒரு கோவலன் இறக்க, தவறு என உணர்ந்து பாண்டியனே 'கொலைக்கு ஈடு-நான் இறத்தலே' என்று உயிர் விட்டான். அந்தோ! மூன்று கொலைகளையும் நான்தான் செய்யக் காரணம் என்று குற்றவாளியே ஒப்புக்கொண்டும், உயிர் விடாமல் 'பாபம் போக்கப் புண்ணிய கங்கையாடப் போந்தேன்' என்று கூறுகின்ருன் மாடலன். இது தமிழ்ப் பண்பாடே அல்ல. துணை வந்த பழியைத் தவிர வேறறியா கவுந்திகூட உயிர் விடுகிருர்; மணிமேகலை பிறந்த விழாவில் பரிசு பெற்ற மாடலன் செய்ந்நன்றிக்காகவாவது உயிர் விட்டிருக்க வேண்டுமே? அவன் பண்பாடே முடிச்சுப் போட்டு வாழ வேண்டும் என்பதால், செய்யவில்லை. கொலை செய்யும் கொடுமையை நீராடிப் போக்கமுடியும் எனத் தமிழர் கருதினரில்லை; தானம் கொடுத்து நீக்கலாம் என தமிழர் எண்ணினரில்லை-உயிருக்கு உயிர் என்பதே தமிழர் பண்பாடு. அந்தப் பண்பாடு வடவாரியப் பண்பாட்டினின்றும் வேறுபட்டது; உயர்ந்தது; ஒப்புயர்வற்றது.

மாடல மறையவன் போன்ற நச்சுப்பிறவிகள் நடமாடுகின்றன, வளர்கின்றன. தமிழர்களே விழிப்பாயிருங்கள் என்ற இளங்கோவடிகளின் எச்சரிக்கையே சிலம்பு காட்டும் மாடல மறையவன் ஆகும்.

–இராம. இராமநாதன், பி. ஏ. (ஆனர்ஸ்.)

வினா – விடை

"கூடலரசன்" பதிலளிக்கிறார்

ப. நடராசன், புதுப்பாளையம்

உங்களைப்பற்றி கம்யூனிஸ்ட்கள் என்ன நினைப்பார்கள்–என்ன நினைக்கிறார்கள்?

நினைப்பதுடன் இருந்துவிட்டால் நமக்கும் தெரியாது. அவர்களின் பரிதாப நிலையும் புரியாது என்பதற்காகவே பல கம்யூனிஸ்ட்கள் எழுதி அனுப்புகிறார்கள். சில வினாக்களைக் கூட அவர்கள் வார்த்தைகளை மாற்றாமல் தந்துள்ளேன். மிகவும் வேதனைப்படுகிறார்கள். கைக்கூலி, கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டவன் என்றுகூடச் சொல்கிறார்கள்! என்னோடு அறிமுகமில்லாத கம்யூனிஸ்ட்கள்–அனுதாபத்துக்குரியவர்கள்–என்னைத் தெரியுமென்றும், கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கும் போதே நடத்தை சரியில்லாத காரணத்தால் வெளியேற்றப்பட்டேன்; விலக்கப்பட்டேன் என்றும் துணிந்து பொய் சொல்கின்றனர். கம்யூனிஸ்ட் தலைவர்களும் இதில் உண்டு! என்னுடையமிக நெருங்கிய நண்பர்களிடத்திலே வாதிட்ட கம்யூனிஸ்ட்களும் கட்சியில் இருந்தால்தானே கம்யூனிஸ்ட்களைப் பற்றிய உண்மைகளைச் சொல்ல முடியும் என்று சமாதானமும் தெரிவிக்கிறார்கள்! என்நிலையைப்பற்றிய அவர்கள் நினைப்பு மிகமிகத் தவறாக இருக்கிறது. கருத்துக்குக் கருத்து, கட்டுரைக்குக் கட்டுரை மறுப்புத் தர வேண்டிய கம்யூனிஸ்ட்கள் என்னைப்பற்றி புலன் விசாரிக்கிறார்களாம். வாய்க்கு வந்ததையெல்லாம் வாந்தி யெடுப்பதாக ஒரு உண்மை விளம்பி எழுத 'ஜனசக்தி' ஆசிரியர்கூட அதனைப் (பாராட்டி) 'கூடலும் ஊடலும்' என்று ஏசி மகிழ்கிறார்!

★

ம. இராஜண்ணம்,
பாலக்கோடு.

இவ்வூரில் நடந்த கம்யூனிஸ்ட் கூட்டத்தில் தி. மு. க. வினரின் கொள்கைப் புத்தகம் இதுவரை வெளி வரவில்லை என்று சொன்னார்கள் – உண்மையா?

பாபம் பரிதாபத்துக்குரியவர்கள்; படிக்கத் தெரியாதவர்கள் போலும்! கழகக் கொள்கைப் புத்தகங்களைப் படித்த கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கே புரிந்துகொள்ளும் பக்குவம் ஏற்படவில்லை! படிக்கத் தெரிந்தும் படிக்க நேரமில்லாமல் தவிக்கும் பாமரக் கம்யூனிஸ்ட் தோழர்களின் கேள்விகள் வேடிக்கையாகவே இருக்கின்றன. கழகக் கொள்கை வெளியீடு இல்லையென்றால் அதனை அறிந்துகொள்ளாமலே கம்யூனிஸ்ட்கள் மேடைக்கு மேடை முழக்கமிடுவதும், பக்கத்துக்குப் பக்கம் பாய்ந்தெழுதுவதும் எப்படி? கம்யூனிஸ்ட்களுக்கு இரண்டொரு மாதங்களாகத்தான் இந்தப் புது வியாதி வந்துள்ளது – வருந்துகிறேன். அந்த நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆரிய மாயை–ஏன் வேண்டும் இன்பத் திராவிடம், என்ற இரண்டு ஏடுகளையும் மிகவும் கவனத்துடன் படித்துப் பார்க்கும்படி! அதன் பிறகும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் புரியவில்லை; அறிவகத்திலேயிருந்து அறிவிப்பு வேண்டுமென்றால் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் சட்டமன்றப் பேச்சுக்களையெல்லாம் மூன்று தடவை படித்துப் பார்த்துவிட்டுத் தங்களுடைய தொண்டர்களுக்குச் சொல்லிப் புரிய வைக்க வேண்டும்!

★

மணிமாறன், திருச்சி.

'உறவாடிக் கெடுப்பது' கம்யூனிஸ்ட்களின் கொள்கையா?

ஆம்; ஏராளமான சான்றுகள் உண்டு. தேர்தல் நேரங்களில் இந்தத் தொழிலை மறக்காமல் செய்து காட்டுவார்கள் கம்யூனிஸ்ட்கள்! 1957 பொதுத் தேர்தலின் போது மதுரை மத்தியத் தொகுதியில் கம்யூனிஸ்ட்கள் போட்டியிடவில்லை. பிரஜா – சோஷலிஸ்ட் அபேட்சகர் என். கே. பாகுலேயன் என்பவரை ஆதரிக்க இசைந்தார்கள்! பாகுலேயன் வாயிலாக தங்கமணிக்குப் பார்லிமெண்ட் வாக்குகள் கிடைக்க வேண்டுமென்ற விருப்பத்தில் உறவாடினார்கள். ஆனால் பார்ப்பனப்பிரமுகர்கள், ஒரு கம்யூனிஸ்ட் தூண் எனத் தகும் ஒருவரின் அயர்வில்லாத உழைப்பினால் காங்கிரஸ் அபேட்சகர் சங்கரனுக்கே கம்யூனிஸ்ட்களின் வாக்குகளைத் தந்து, தோழர்பாகுலேயனைக் கெடுத்தார்கள்! பதவி என்றால் எவருடனும் ஐக்கியமாகிவிடுவார்கள்! தங்கள் காரியம் முடிந்துவிட்டால் மறுநாளே துரோகம். காங்கிரஸ்காரர்களுடன் கூட்டாக இருந்து அவர்களைக் கெடுக்க முனைந்த நேரத்தில் கம்யூனிஸ்ட்களின் உறவு வேண்டாம் என்று விரட்டியடித்தார்கள்! பிரஜா சோஷலிஸ்ட் கட்சியுடன் ஒரு நாள் ஒப்பந்தம் செய்துகொள்வார்கள் – உறவாடிக்கொண்டே ஏதாவது ஒரு வகையில் கெடுக்க நினைப்பார்கள். பல முறைகள் பகையாட்களாகியும் பங்கப்பட்டும் ஓடி வந்துள்ளார்கள்! சோரம் போன கதைகள் இப்படி எத்தனையோ?

★

கம்யூனிஸ்ட் பூ. நடராசன்,
கோவை.

சோற்றுக்கே தாளம் போடும் போது எப்படி மானத்துடன் வாழமுடியும் என கேட்கும் எங்களை ஏசுவதுதான் உமது தொழிலா?

கம்யூனிஸ்ட் கட்சியின் தரத்தைத் தாழ்த்துகிறீர் இந்தக் கேள்வியின் வாயிலாக! தமிழன் தன் தன்மானத்தைக் காக்க வேண்டும் என்பதும் உங்களுக்குப் புரிந்திருக்கிறது. 'சோறு பெரிது மானம் பெரிதல்ல' "சோறா? மானமா?" போன்ற உங்கள் தலைவர்களின் சொல்லாடல்களை நாங்கள் பல முறை விளக்கிவிட்டோம். ஆனால் உங்களைப்போன்ற கம்யூனிஸ்ட்கள் இன்னும் பழைய பாதையிலேயே பயணம் செய்கிறீர்கள்! உங்களுடைய அனந்தன் நம்பியார் பத்து நாட்கள்வரை சோறு இல்லாமல் உண்ணா விரதமிருந்தார் – அதே அனந்தன் நம்பியார் உடலிலே ஆடையில்லாமல் அரை மணி நேரம் இருக்கமுடியுமா? 'ஜனசக்தி' பத்திரிகையில் படம் வெளி வருமா? தேசியக் கௌன்சில் தலைவர்கள் வந்து பேட்டி காண்பார்களா? சோறில்லை. நான் மானத்தை விலை பேசுகிறேன் என்று தயை கூர்ந்து சொல்லாதீர்கள்! நம்பியாரை மறக்காமல் சிந்தியுங்கள் சோறு–மானமா என்று! கம்யூனிஸ்ட்களின் கருத்தோட்டங்களில் உள்ள வளைவு நெளிவுகளை எடுத்துக் காட்டுவது வார்த்தைகளால் உங்களை ஏசுவதல்ல! மனங்குமுறிக் கடிதங்களை எழுதுவது உங்கள் பலக்குறைவைத்தான்–கம்யூனிஸ்ட் கட்சியின் தரக்குறைவைத்தான் காட்டும்!

★

எஸ். எஸ். சங்கர்,
திருப்பத்தூர்

தூத்துக்குடித் துணைத் தேர்தலில் அதிக ஓட்டுக்கள் பெற்றதாக இறுமாப்புடன் பேசியவர்கள் நகராட்சி மன்றத் தேர்தலில் தேய்ந்து போனது ஏன்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நேர்மையான மோதுதலில் கம்யூனிஸ்ட்கள் முன் வரும்போது பலத்த அடிபட்டு விழுகிறார்கள் என்பதைத்தான் தூத்துக்குடிச் செய்தி தெரிவிக்கிறது. இனி தூத்துக்குடியைப்பற்றிப் பேசமாட்டார்கள். கோவையை எடுத்துக் கொள்வார்கள்! மதுரையிலே பெற்ற வெற்றிகளை கம்யூனிஸ்ட்கள் தங்களுடையதே என்று சொல்லுவார்களேயானால் அவர்கள் சர்வகட்சி ஆதரவை நாடிப் பெற்றதை மறுக்கும் அரசியல் அநாகரீகமாகும்! இருந்தாலும் கூட கம்யூனிஸ்ட்களுக்குச் சேலமும் தூத்துக்குடியும் புதிய பாடங்களைத் தருகின்றன! சென்னை அவர்களைப் பற்றிச் சோகச் செய்திகளைத் தரக் காத்திருக்கிறது!

★

கே. தருசாமி, மேட்டூர் அணை.

1942 ஆகஸ்ட் போராட்டத்தின்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டம் எப்படி இருந்தது? அவர்களின் பங்கு என்ன?

கம்யூனிஸ்ட் கட்சி ஆகஸ்ட் கலவரத்தில் நிலையான ஒரு இடம் கிடைக்காமல் தத்தளித்தது. காங்கிரஸ் கட்சியின் வேலைத் திட்டங்களை சில நேரங்களில் வரவேற்பதும் உடனே எந்தக் காரணமும் காட்டாமல் எதிர்ப்பதும், முஸ்லீம்–லீகை ஆதரிப்பதும், வெகு சில நாட்களில் அவர்களைக் கண்டிப்பதும் கம்யூனிஸ்ட்களின் செயல்களாகும்! கம்யூனிஸ்ட்களால் சொந்தமாகச் செயலாற்ற முடியவில்லை! துண்டு வெளியீடுகள் தருவதுகூட அவர்களின் மாபெரும் வேலைத் திட்டமாகும்! "நீ எந்தக் கட்சி" "காந்தி–ஜோஷி கடிதத் தொடர்பு" "காந்தி ஜின்னாசந்திப்பு தேவை" "மீண்டும் கூடுக" என்றெல்லாம் ஆய்வுரைகள் தருவதைத் தான் முக்கியப் பங்காக வைத்துக் கொண்டார்கள். காங்கிரஸ்காரர்களின் கருணைக்காக சோசலிஸ்ட்களைக் கண்டிப்பதையும் தொழிலாக வைத்திருந்தார்கள்! இன்றைய தினம் டில்லி மேயர் அருணாவைப் பாராட்டி மகிழும் கம்யூனிஸ்ட்கள் ஆகஸ்ட்க் கலவரத்தில் அவர் தலைமறைவாக இருந்ததைக் கேலி செய்தார்கள். காங்கிரஸ் காரியக் கமிட்டி கம்யூனிஸ்ட்களின் கழுத்தில் கையைக் கொடுத்து வெளியே தள்ளிய பிறகும்கூட தங்களின் 'பதிபக்தி'யை இவர்கள் குறைத்துக் கொள்ளவில்லை.

★

குருஷேவ்தாசன், திருச்சி

முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தமிழ் மொழியின் எதிரிகள், ஆங்கில மோகம் பிடித்தவர்கள் என்று ஜீவானந்தம் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் பேசுகிறார்களே—உண்மைதானா?

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள்தான் தமிழுக்கு தகுதியைத் தேடித் தந்தவர்கள். எந்தக் கட்சிப்பற்றும் இல்லாத ஒருவர் நல்ல தமிழ் பேசினால் நீ 'கழகத்துக் காரனா' என்று கேட்கப்படுகிறதே தவிர 'கம்யூனிஸ்ட்க் கட்சி ஆளா' என்று கேட்கப்படுதில்லை! மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன் விழாவில் அறிஞர் அண்ணாவும், நாவலர் நெடுஞ்செழியனும் பேசினார்கள். சிவானந்தமும் ஆடி ஆடிப் பேசினார். விழா முடிந்த பின்னும் மக்களின் இதயநாடிகளைத் தொட்டது அறிஞரும் நாவலரும் தந்த நல்ல கருத்துக்கள்! இன்னும் சொல்வேன். பேரிகை ஆசிரியர் எஸ். எஸ். மாரிசாமி 'அமெரிக்கா' என்றோர் புத்தகம் எழுதினார். அவர் எழுதியிருக்கும் தமிழ் 'நல்ல தமிழா?' என்று நிர்ணயிக்கும் தகுதி அறிஞர் அண்ணாவுக்குத்தான் உண்டு என்று காங்கிரஸ் சர்க்காரே சொன்னது. கம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரங்களும், ஜீவாக்களும், வெங்கட்டராமன்களும் கலைக்களஞ்சியமெனத் தகும் தங்கமணிகளும்தான் தமிழிலே வல்லவர்கள் என்று எவரும் அன்றும் சொல்லவில்லை. இன்றும் சொல்லத் தயாராக இல்லை! எழுத்திலும் பேச்சிலும் அறிஞர் அண்ணாவின் பரம்பரை அமைந்துள்ளதே. தவிர ஜீவானந்தம் போன்றவர்கள் இந்தத் தலைமுறைக்கு எந்தத் துறையிலாவது வழிகாட்டிகளாக இருக்கிறார்களா? எனவே தமிழ்மொழியின் எதிரிகள் என்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் ஆங்கிலமொழி வளத்தைப் புரிந்துகொள்ளும் திறனற்றுப் போன கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆங்கிலமோகிகள் என்று சொல்கிறார்கள் போலும், நான் துணிவோடு சொல்வேன் ஜீவானந்தங்கள் ஆங்கில அறிவு மிக மிகக் குறைந்தவர்கள், அறிஞர் அண்ணா அவர்களுடன் ஒப்பிட்டால்! எனவே எரிச்சல் படுகிறார்கள்!

விருத்தப் போட்டி

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்ன கா ரணமோ?
பன்னகர் சபையில் பல்லுயர் இடங்களை
அடைந்தது வெற்றித் திராவிடம்
அன்னது வெற்றியைக் கண்டதும் மங்கை
ஆடினுள் உதயசூ ரியனில்
இன்னலை உற்றவர் இன்பம் கண்டிட
இனிவழிப் பிறந்ததிந் நாட்டில்!

—இராமு, அரிமழம்.

★

பொன்னவிர்மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
என்றுளம் பலவாய் எண்ணிடும் வேளை
என்தமிழ்க் குழுவினர் ஆங்கே
தென்னவர் மாண்பைத் தீய்த்திடும் வடவர்
தீத்திறம் ஒழித்திட வாரீர்
என்றிட, குழலி இணைந்தனள் குழுவில்
என்னுயிர் மகிழ்ந்ததே இதனால்,

—வி. எஸ். வேலாயுதம், சென்னை-14.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
கன்னல் தமிழில் காதல் மொழியை
கற்றிடப் பெண்மயில்போ னளோ?
அன்ன நடையில் பெண்ணிவள் காதல்
ஆரம் புனைந்திடப்போ னளோ?
கன்னியின் அழகைக் காண்பவர் கலையின்
காட்சியாய் கொள்ளப்போ னளோ?

—தமிழ்மாறன், சென்னை-1.

★

சின்னவிற் புருவஞ் சேரச் செவ்விதழ்
செறிந்து தோன்றப் பொழிலில்;
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
முன்மொழி மறந்தேன் ஆ! ஆ! முழுமதி
இன்றென வறிந்தேன் நானே;
அன்னவள் துன்பம் சொண்டாள், கண்டேன்;
அன்புடன் முயங்கச் சென்றேன்.

—பெ. திருவரங்கராசன், கோர்பை.

★

இன்துணை இன்மை ஏக்கமிக் கொண்(டு)
ஏகிய இன்பயேக் கமதில்;
முன்னவிர் காலை முத்தமிட்(டு) ஏகி
பின்னவிர் மாலைமுத் தமிட;
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
இன்னவள் இன்பச் சேர்க்கையில் சொல்வாள்;
"இன்னம்நீர் எங்குளீர்?" என்றே.

—காட்டுலிங்கன், காட்டுப்பாளையம்.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
மின்னொளிர் கின்ற மாமுகம் இன்பம்
மேவிட என்னகா ரணமோ?
பன்னவிர் வண்ணம் பார்ப்பவர்க் கீந்து
பாடிட என்னகா ரணமோ?,
நன்மலர் முல்லை நாறிடத் தோகை
நைந்ததற் கென்னகா ரணமோ?

—மொ. இராமலிங்கன், காட்டுப்பாளையம்.

★

இன்னலால் வாடி இதயமும் நொந்து
இருந்திடும் வேலைஇச் செனவே
மன்னவன் தருவான் மட்டிலா முத்தம்
மங்கையேன் வாட்டமென் றிடிலோ,
கன்னலின் மொழியே காளையும் வாரான்
களிப்பது விடுகென்றுரைத் தாலும்
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—வேணுகோபால், கோற்காடு.

★

புன்னகை ஒன்றிற் கீடாய் நல்க
புவியினில் பொருள் ஏது?
அன்ன நடையயில் மின்னற் கொடியிடை
அடிமை இல்லா மாது!
மென்கையில் சைகையால் முத்தங் கொடுத்து
மீட்டுவாள் இன்பம்; வாளா
பொன்னவிர்மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—ரெ. துரைராசன், கொள்ளிடம்.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
என்னுயிர்க் காதலர் மானே! தேனே!
தெவிட்டாச் செந்தமிழ்ப் பாகே!
என்றெனை யணுகிக் காண வுலகை
இனிதாய்க் காட்டிடத் தானே?
பொன்னொளிர் மேனிச் செங்கதிர் தன்னின்
தூதுடன் வந்ததோ சொல்வாய்.

—எ. கலைமுகிலன், செய்யாமங்கலம்.

★

பின்னிய கூந்தல் பெண்ணிவள் யாரோ?
பெருகிய செந்தமிழ்த் தேனோ?
இன்னுயிர் ஆசைக் காதலன் தேடி
இன்முகம் சாட்டவே விரைவில்
தன்னிடம் ஓடி வருவான் என்றே!
தனிமையில் வந்திருப் பாளோ?
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—கே. வி. வீரண்ணா, சித்தையங்கோட்டை.

★

புன்னகை இதழும் பூவா முல்லைப்
புதுமலர் எனநிகர் எயிறும்
நுண்ணிடைப் பொலிவும் நுதற்பிறை எழிலும்
நோய்மிகத் தருமிள நகிலும்
பண்ணெனும் சொல்லும் பார்வையில் நோயும்
பால்மதி முகம் படைத்த
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—மணிமாறன், தேனி.

★

தென்றலும், சீதத் தேன்மதி நிலவும்
தீயினைப் போலவே சுடவே,
மென்மலர்ச் சேக்கை கல்லெனக் குத்த
வெம்புவள் காதற் பிணியால்;
இன்னுயிர்க் காதல் மன்னரைத் தேடி
வந்தனள் என்ப தலாது
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

★

மின்னொளிர் வானின் தண்மதி முகத்தில்
விளங்கிடும் கூரிய விழிகள்
மின்னெனப் பாய்ந்தென் உளத்தினில் காதல்
விளைத்தன; புன்னகை இதழும்,
கன்னல் மொழியும் தளிர்க்கொடி நடையும்
கருத்தினைக் கவர்ந்தன முறையே.
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—சா. கா. சாகுல்அமீது, சென்னை-21.

★

அன்பால் உள்ளம் ஒன்றுடன் ஒன்று
ஆர்ந்து வழுவா திருந்திட்ட
மன்னிய காதலை மறந்தே மாதா
சொற்குப் பணிந்தான்; அறியான்போல்
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
என்றுன், தன்னிலை கூறிக் காதல்
வாழ்வு கேட்ட வனிதையிடம்

—இளமாறன், பிலாவிடுதி.

★

கன்னலை யேய்க்கும் இன்துவர் வாயால்
கருத்தினை ஈர்த்ததும் ஏனோ?
மின்னலும் நாணும் மெல்லிடை நோவ
என்னுளம் நின்றே ஏங்க
அன்னமும் தோற்கும் நன்னடை மங்கை
அளித்ததும் அன்பெனும் அமுதோ?
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?"

—தாம்பரக்கிழான், தாம்பரம்.

★

"மின்னொளி நாணும் மென்னிடை யாளும்
மெல்லென வந்தனள்; நின்று
புன்னகை சிந்தி என்னுயிர் கொண்டு
போயினள் அன்றொரு நாளே;
கண்ணொளி காட்டிக் காத்திட எண்ணும்
கருணைதான் கொஞ்சமும் இல்லாப்
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—அரி-'மதி' திண்டிவனம்.

★

சன்னலின் பக்கம் நின்றிடும் என்னை
சாடையாய்க் கூப்பி ல் கண்டே
என்னுயிர் மேவி ஈர்த்திடும் நும்மால்
"என்னென" யானுமே வந்தேன்;
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
என்றெனைக் கேட்டால் யாதுநா னறிவேன்
என்னுடை யன்பரே சொல்வீர்

இரத்தினசனர்த்தனன், கவுண்டர்பாளையம்.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
"என்றுமே கங்குல் நேரமே சென்று
எத்தனை நாட்களுக்(கு) ஆம்பல்
ஒன்றையே சூடி வாழ்வது? இன்றைக்
கோர்தினம் ஆதவன் விழுமுன்
சென்றொரு பொய்கைத் தாமரை கொய்து
செல்லுவம்" என்று நினைத்தோ?

—பெரு. இராமச்சந்திரன், மேலூர்.

★

என்னுளக் கோயில் தன்னிலே வாழ
எண்ணம் இலாமையி னுலா?
எண்ணிய போது நன்னிடத் தாமதம்
பண்ணிய காரணத் தாலா?
சின்னக் குலத்தில் பிறந்தவன் என்றவள்
தந்தை செப்பிய தாலா?
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—சிவ. சுப்பு, சிவகிரி.

★

பன்வரும் "அகத்தைப்" பாங்குடன் கற்ற
பைந்தமிழ்க் குடியில் பிறந்த
என்னரும் அன்பே! எழிலே! ஆம்பல்
ஏனோ சிரிப்பது என்று
உன்னிய துண்டோ? ஒளிர்வெண் மதியம்
உன்முகம் கண்டு தானோ?
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலைப்
போந்ததற் கென்னகா ரணமோ?

—க. குணசேகரன், சென்னை-1.

★

இன்னலில் மூழ்கி என்னுளம் வாட
எங்கவள் சென்றுள் தனியாய்
என்றுயான் எண்ணிக் கன்றிடும் போது
இன்புறப் பூம்பொழில் நடுவே
புன்னகை காட்டி நின்றனள் முன்னம்
பூவென நினைத்தது பிழையே
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—கு. பரிமளம் கமுதி.

★

தண்ணொளி வீசும் வெண்ணிறத் திங்கள்
தாரகை சூழ்ந்திட வரலேன்?
என்னுயிர் நாதன் இன்றிராப் போதில்
என்னிடம் சேர்வது அறிந்தோ?
பெண்மட மாது என்மன நோவு
பெருகவோ? தோழி! இன்று
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—பே. சா. தனராசு, நாமக்கல்.

★

அன்னமென் நடையாள் அன்பினை யுடையாள்
ஆடிடும் பாம்பெனும் சடையாள்
சின்னதோ ரிடையாள் சேலெனும் விழியாள்
சித்திரப் பாவையின் ஒயிலாள்
கன்னியர் புகழும் கவின்பெறு நுதலாள்
காளையர் நெஞ்சைத் துளைக்கும்
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?

—செகதவல்லி, திருவெண்ணெய்நல்லூர்.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?
இன்பமே கன்னல் சேர்நறுஞ் சாறே!
இன்னிசை பாடிட வருவாய்
என்றனை நாடி என்னுரை கேட்டோ!
என்னுயிர்க் குதவிட நினைந்தோ!
தென்றலின் மேனி துன்புறு மாறு
மென்னடை கொண்டனள் திருவே!

—புலவர் அ. ச. இளம்பரிதி, புதுவை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு·